உ
சிவமயம்



# நமச்சிவாயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

சைவத்தமிழ் உலகிற்குப் பெரும் தொண்டாற்றிய பேராசான்

சிவாச்சாரிய பீடாதிபதி

# ஸ்ரீலஸ்ரீ கைலாசக் குருக்கள் நமசிவாயக் குருக்கள்

அவர்கள்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1944 | 2004 |
| 03 | 07 |
| 02 | 17 |



திதிவெண்பா

ஆண்டுயர் தாரண ஆடிநன் மாதத்துக்
காண்பு அமாவாசை காண்திதி ~ மாண்பார்நன்
சுத்தாத் துவிதநெறித் தூயர் நமசிவாயம்
அத்தன் பதம் சேர்பு ஆங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



திருமுறைப் பாராயணம்
திருச்சிற்றம்பலம்

## தேவாரம்

இருளாயவுள்ளத் தினிருளை நீக்கி
யிடர் பாவங்கெடுத்தேழையேனையுய்யத்
தெருளாத சிந்தை தனைத் தெருட்டிதன்போற்
சிவலோக நெறியறியச் சிந்தை தந்த
அருளானை யாதி மாதவத்துளானை
யாறங்க நால்வேதத்தப்பானின்ற
பொருளானைப் புள்ளிருக்கும் வேளூரானைப்
போற்றாதே யாற்ற நாள் போக்கினேனே.

## திருவாசகம்

இருதலைக் கொள்ளியி னுள்ளெறும்
பொத்து நினைப்பிரிந்த
விரிதலையேனை விடுதிகண்டாய்
வியன் மூவுலகுக்
கொருதலை மாமன்னும் உத்தர
கோச மங்கைக் கரசே.
பொருதலை மூவிலைவேல்
வலனேந்திப் பொலிபவனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஏகநாயகனை இமையவர்க் கரசை
என்னுயிர்க் கமுதினை எதிரில்
போக நாயகனைப் புயல்வணர்க் கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா யூர்ந்த
மேக நாயகனை மிகுதிரு வீழி
மிழலை விண்ணிழி செழுங் கோயில்
யோக நாயகனை அன்றிமற் றொன்றும்
உண்டென உணர்கிலேன் நானே.

## திருப்பல்லாண்டு

ஆரார் வந்தார்? அமரர்
குழாத்தில் அணியுடை ஆதிரைநாள்
நாரா யணனொடு நான்முகன்
அங்கி இரவியும் இந்திரனும்
தேரர் வீதியில் தேவர்
குழாங்கள் திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும்
ஆடியும் பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

வேதநாயகனே போற்றி
விண்ணவர் தலைவா போற்றி
மாதொரு பாகா போற்றி
மறுசமயங்கள் மாழ்க
பேதகம் செய்வாய் போற்றி
பிஞ்ஞகா போற்றி
யான்செய் பாதகம் அனைத்தும் தீர்க்கும்
பராபரா போற்றி போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

எழுகடல் மணலை அளவிடி னதிக
மெனதிடர் பிறவி அவதாரம்
இனியுன தபய மெனதுயி ருடலு
மினியுடல் விடுக முடியாது
கழுகொடு நரியு மெரிபுவி மறலி
கமலனு மிகவு மயர்வானார்
கடனுன தபய மடிமையு னடிமை
கடுகியு னடிகள் தருவாயே
விழுதிக ழுழகி மரகத வடிவி
விமலிமுனருளு முருகோனே
விரிதல மெரிய குலகிரி நெரிய
விசைபெறு மயிலில் வருவோனே
எழுகடல் குமுற அவுணர்க ளுயிரை
யிரைகொளும் அயிலை யுடையோனே
இமையவர் முனிவர் பரவிய புலியு
ரினில் நடமருவு பெருமானே.

## மூத்தவிநாயகன்

ஆத்ம அத்துவித அனுபந்த அன்பு மயம்
பூத்த புத்துயிர்ப்பின் பிரணவ மூத்த விநாயகரைக்
காத்தருள வேண்டி நிதம் கையெடுத்த எந்தை
பூத்தமலராய்ப் புரந்தரர் பாதம் சார்ந்துயுமே!

## முதலைக்குழி முருகன்


முதலையுண்ட குழந்தை மீட்ட சமயத்துத் தனித்தமிழ்
முதலைக்குழி முருகன் பதம் தோய்ந்த எம் நிகரில்
முதலை நிர்மலன் தாளத்துவித முறுமெந்தையெம்
முதலை முன்னின் றருளியது உணர்ந்த தெம்பேறே.

## உச்சில் புவனேஸ்வரியம்பாள்

உள்ளங்கால் தொடங்கி யுச்சி யீறாய்க்
கள்ளமிலா மனத்துக் காதலினால் பக்தி
யுள்ளூறிப் பிரவாகித்த எந்தையைத் தன்
னுள்ளத்திருத்துவள் உச்சில் புவனேஸ்வரியம்மனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**தேர்விலருள் - தேனமுதம் - தோய்களிப்புத் தேரவே**
**சீர்க்குரு மும்மொழிச்சை வக்கிருதிச் சூர்யனே**
**தாரணா டிக்குள்ள மாவாசை பாரதனிக்**
**காரண காரிய வாயமைந்த பூரண**
**வாநா கணிக்ச் சியேகம்ம நீஓம்**
**நமசிவா யக்குருக்கள்**

**- தங்கமயில் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளுமையுடன் மிளிர்ந்த பண்டிதர்

## சிவஸ்ரீ கை. நமசிவாயக் குருக்கள்.

கல்வித்துறையிலும் அதனோடு இணைந்த துறைகளிலும் தனித்துவமான ஆளுமையுடனும் கல்விப்புலமையுடனும் திகழ்ந்த பெருமைக்குரிய ஒருவராக திகழ்ந்தவர் அமரர் சைவசமயஆகம விதிமுறைகளில் பாண்டித்தியம் பெற்றவராகவும் சைவப் புலவராகவும் பண்டிதராகவும் சைவக்குருமார் ஒன்றியத்தின் தலைவராகவும் உச்சிற் புவனேஸ்வரி அம்பாள் ஆலய ஆலோசகராகவும் பல காலம் கடமையாற்றி உள்ளார். இவர் ஆலயத்தின் வளர்ச்சிக்கும் உயர்வுக்கும் உற்ற உறுதுணையாக செயலாற்றி உள்ளார். முக்கியமாக தீர்த்தக்கேணி அமைவதற்கு நோய்வாய்ப்பட்டு இருந்த பொழுதிலும் தாமாகவே முன் வந்து தீர்த்தக் கேணி நிலையம் அமைப்பதற்கு பேருதவி புரிந்துள்ளதுடன் இன்று இவ்வாலயம் பொலிவு பெறக் காரண கர்த்தாவாக இருந்துள்ளார். பல துறைகளிலும் ஆளுமையுடனும் அர்ப் பணிப்புடனும் செயற்பட்ட இவர் இவ்வாண்டு ஆடி மாதம் 17ம் திகதி இவ்வுலகை விட்டுப் பிரிந்தார். அன்னாரின் இழப்பு அவரது குடும்பத்தினருக்கு மட்டும் அல்லாது இவ்வூர் மக்களுக்கும் உச்சில் புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்திற்கும் பேரிழப்பாகும்.

'உச்சிற் புவனேஸ்வரி அம்பாளின் ஆலயத்தில்
ஓங்கு பரிபாலன சபையினிலே
மெச்சுகின்ற மேன்மைமிகு ஆலோசகராய்
மிளிர்ந்து பணியாற்றி நின்ற மேலோனாம் சிவஸ்ரீ நமசிவாயம்"

**ச. சோமசுந்தரன்**
**(சமாதான நீதவான்)**
தலைவர்
உச்சிற் புவனேஸ்வரி அம்பாள்
ஆலய பரிபாலன சபை

**கரணவாய் கிழக்கு,**
**கரவெட்டி.**
**22.07.2004**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்திரான் முருகனும் நமசிவாயக் குருக்களும்.

இவ்விரு நாமங்களும் இரண்டல்ல ஒன்று என்பதற்கிணங்க நமசிவாயக்குருக்கள் முருகமூர்த்தியாகவே செயற்பட்டார். அந்திரான் முருகமூர்த்தி ஆலய பிரதமகுருவாக கடந்த நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக விசேட தினங்களில் தீப ஒளிகாட்டி இவ்வாலய சுற்றாடல் வாழ் மக்களின் நலன்பேணி நல்லாசி கூறி வாழவைத்த பெருமகன் எங்கள் குரு சிவபதமடைந்த ஸ்ரீலஸ்ரீ கை. நமசிவாயக்குருக்கள் ஐயா அவர்கள்.

நித்திய பூசகராக சிற்றம்பலம்ஐயா இருந்தகாலம் தொடக்கம் இன்று வரை பிரதம குருவாக இருந்து செயற்பட்டார். ஐயா தனது பெரியதந்தையார் வைத்தியநாதக் குருக்களுடன் சிறுவயதிலிருந்தே எங்கள் முருகமூர்த்தி கோயிலுக்கு வருகை தந்து கோவிலை தனது உயிராக்கிக் கொண்டார். இறக்கும் வரை பிரதமகுருவாக இருந்தார். சென்ற ஆனிஉத்தரத்தன்று சங்காபிஷேகத்தை திறம்பட நடாத்தி எங்கள் எல்லோர் உள்ளத்திலும் நிறைந்து விட்டார்.

ஒருமுறை யான் அவரை விஷேட பூசைக்காக அழைக்கப் போயிருந்தபோது ஐயா சொன்னார் "இது எங்கள்கோயில் எங்களுக்கு கடமை உண்டு அதை நான் செவ்வனே செய்ய வேண்டும்" என்றும் விஷேட பூசை நாட்களில் நாங்கள் அவரை வரவழைக்கப் போனால் எத்தனை மணிக்கு வரவேண்டும் என்றும் கேட்பார். அதன்படி வந்து விஷேட பூசை முடியுமட்டும் வேறு எந்த எண்ணமும் இல்லாது முருகனுடன் ஒன்றாகவே நிற்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது அனுபவத்தில் அமரர் அவர்கள் செய்யும் பூசை முறையை யான் இன்னும் எந்தக் கோவிலிலும் காணவில்லை. எனது இளைய தம்பியினுடைய விவாகநிகழ்வில் பஞ்சகவசம் மணமக்களுக்குக் கொடுத்த ஒரே ஒரு குரு நமசிவாயக் குருக்கள் அவர்கள் தான். ஐயா அவர்கள் பாண்டித்தியம் பெற்ற ஒரு நல்ல ஆசிரியர், ஆலோசகர், சோதிடர் கரவையில் அவர் சைவத்திற்கும் தமிழிற்கும் ஆனித்தரமான கருத்துக்களை கவரும் வண்ணம் எந்த இடத்திலும் சொல்லத் தயங்க மாட்டார். கோயில் கிரியைகளில் அவர் செய்யும் முறையைப் பார்த்து உணர்வுபூர்வமாக இரசிப்பார்களே தவிர விமர்சிக்கமாட்டார்கள்.

ஐயா அவர்களின் ஈடு செய்யமுடியாத இழப்பு, எங்கள் கரவை வாழ்மக்களுக்கு பேரிழப்பாகும். ஐயா அடிக்கடி நினைவுகூறும் முருகன் வேண்டல்.

"விழிக்குத்துணை திருமென் மலர்ப் பாதங்கள் மென்மை குன்றா
மொழிக்குதுணைமுரு காவெனு நாமங்கள் முன் செய்த
பழிக்குத் துணை அவன் பன்னிரு தோழும் பயந்த தனி
வழிக்குத் துணை வடிவேலுஞ் செங்கோடன் மயூரமுமே"

இப் பாடலை சிறியோர் முதல் பெரியோர் வரை பலரும் பாடும் பழக்கத்தை ஐயா இச் சுற்றாடலில் ஏற்படுத்தினார். என்பதை நினைவுகூறுவோமாக.

முருகன் துணை.
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**வீ.சி நடராஜா**
பரிபாலன சபை
அந்திரான் முருகமூர்த்தி ஆலயம்
கரவெட்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்வை ஸ்ரீமுத்துமாரியம்மன் தேவஸ்தான பிரமகுருவின் இரங்கலுரை

'தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று"

என்ற தெய்வப் புலவர் வள்ளுவர் திருவாக்கிற்கிணங்க புகழ் பூத்த வைசகுருமாரின் உறைவிடம் என கருதப்படும் கருணையம்பதியில் உதித்த அமரர் பண்டிதர் ஸ்ரீலஸ்ரீ கைலாயக் குருக்கள் நமசிவாயக்குருக்கள் சிவபதமடைந்து விட்டார் என்ற செய்தியினைக் 18.07.2004 உதயன் நாளிதழில் கண்டு மிகவும் அதிர்ச்சியடைந்தேன்.

அனைத்துலக சைவக்குருமார் பேரவை ஒன்றியத்தின் பீடாதிபதியாகிய இவரை இறைவன் தன்னுடன் சேர்த்துக் கொண்டமை எமது சமூகத்திற்கு பேரிழப்பாகும். இவ்விழப்பினை எவராலும் ஈடுசெய்ய முடியாது. சைவ அர்ச்சகர்களுக்கு வேத ஆகம சோதிட கல்வியை ஆரம்பித்து வகுப்புகள் பெரும் ஆவலுடன் நடாத்திய காலத்தில் திடீரென காலமானது எம் எல்லோரையும் ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டது. இவர் இன்னமும் சிறிது காலம் வாழ்ந்திருந்தால் எமது சமூகத்திற்கு மிகவும் பயனுடையாத இருந்திருக்கும். இவருடைய பெயர் நமசிவாய அதாவது ஸ்ரீ பஞ்சாட்சரம் என்று சொல்லப்படும் பொருளை உடையது. பேருக்கேற்ற இவருடைய தன்மைகளும் இருந்ததை யாரும் மறைக்கவும் முடியாது மறக்கவும் இயலாது.

அடியேன் மீது மிக்க அன்புகொண்டவர் அடிக்கடி இவரை நான் சந்தித்து ஆலோசனைகளை பெற்று வந்ததை இன்று நினைவுகூரும் வண்ணம் உள்ளது. ஓரிரு நாட்களுக்கு முன்பு அவரை சந்திக்க இருந்தேன், ஆனால் காலம் கைகூடவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுடன் சந்நிதியான் ஆச்சிரம கலைப் பண்பாட்டு பேரவையின் போசகராகவும் ஆரம்ப காலம் தொடக்கம் பணியாற்றியவர். எமது ஆலயத்தில் அடியேனின் வேண்டுகோளை ஏற்று பல முறை சமய சொற்பொழிவுகள் செய்தார்.

இவரின் மறைவு சைவத்திற்கும் தமிழிற்கும் குறிப்பாக எமது சைவ இளவயதினருக்கும் பேரிழப்பாகும். இவரின் பிரிவால் துயறுற்றிருக்கும் குடும்பத்தாருக்கு எனது ஆழந்த அனுதாபங்களையும் தெரிவித்து இவரின் ஆத்ம சாந்தியடைய எல்லாம் வல்ல வல்லை நகரின் தெய்வமான அன்னை ஸ்ரீ முத்துமாரித் தாயை பிரார்த்தித்து அமைகின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

"அன்னை இல்லம்"
வன்னிச்சி அம்மன் கோவில்
வல்வெட்டி,
வல்வெட்டித்துறை.

"சிவாகம சித்தாந்த ஞானதேசிக பானு"
பிரதிஷ்டா அலங்கார சித்தாந்த சாகரம்"
பிரதிஷ்டா சிரோன்மணி"
ஸ்ரீவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர்
சமாதான நீதிபதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருவூர் பேர் மரம்

பரம்பரை பாரம்பரியம் மரபு வழிவந்த இருவேறு திருவும் இலங்கு சமஸ்கிருதத்தின் மையில்கல்லும் மரபு வழிவந்த தமிழ்க்கல்விப் பாரம் பரியத்தின் கடைசிக் கொழுந்தின் புதிய வேர்.

நகை, மொழி, இனிய பேச்சு, கூர்த்த மதி, நினைவு ஆற்றல், மெய்பொருள் காணும் சலியாத முயற்சி கண்டோரைக் கனியவைக்கும் பார்வை ஆகிய கனிகள் இப் பெருவூர் வேர் மரத்தின் கனிகள் ஆகும்.

நேர்மை, வாய்மை, உண்மை, மேன்மை, அறநூல் வகுத்த வாழ்க்கை பூசை, அர்ச்சனை, தவத்தால் நிமிர்ந்து நின்ற சான்றோன்.

தமிழ்ச் சான்றோன், சமயகுரு ஆலய இருவரிடத்தும் இருக்க வேண்டிய அத்தனை சிறப்புக்களும் ஒருங்கே அமைய வாழ்ந்து காட்டிய சிறந்த தமிழ் ஆசான் நல்ல குருக்கள்.

என்றுமுள தென்தமிழுக்கு இலக்கிய மொழி இலக்கண வேலி அவசியமும் கட்டாயமும் தேவையென நம்பி அதைக் கற்பிப்பதே ஒரு தவமாகக் கருதி பெருமாணவ பரம்பரையை வளர்த்தெடுத்த பெருவூர்ப் பேர்மரம்.

சென்ற காலத்தின் பழுதிலாத் திறம், நிகழ் காலத்தில் எவ்வாறு பெருவூட்டம் பெறமுடியுமென்பதை நிதர்சனமாகக் காட்டிய பேரறிவாளன். "சைவநெறியாளன், சிறந்த சோதிடர், பண்டிதர், சைவப்புலவர், இந்து சமய ஆசிரிய ஆலோசகர், சைவக்குருமார் பேரவை நெறியாள், சன்னதியான் ஆச்சிரம கலைப்பண்பாட்டு பேரவையின் காப்பாளர், அனைத்துலக சைவக்குருமார் பேரவையின் சிவாச்சாரிய பீடாதிபதி, சமஸ்கிருத இலக்கண சோதிட சைவசித்தாந்த கல்லூரி அதிபரும், ஆரிய திராவிட பாசாவிருத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்க உறுப்பினரும் பண்டித ஆசானும் என்றும் தமிழ் சைவ உலகம் தலைமேல் வைத்துக்கொண்டாடிய எங்கள் ஸ்ரீலஸ்ரீ கைலாசக் குருக்கள் நமசிவாயக்குருக்கள்.

அந்த பெரிய பரிபூரணமாம் பெரும் பேரொலிக்குள் கலந்து விட்டது.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!

**சிவஸ்ரீ தியாக. சோமாஸ்கந்தராஜக்குருக்கள்.**
**(அருள்மிகு வீரமாகாளியம்மன் வடபத்திரகாளியம்மன் பரம்பரை அர்ச்சகரும், ஹாட்லிக் கல்லூரி ஆசிரியரும், சைவசித்தாந்த பண்டிதரும்)**

தவம் மிக்க தக்கனது தலையதைப் பலிகொண்ட
தகவீர பத்திரற்குச்
சக்தியெனவந்திடப்பாகமது கொண்ட
சராசரத் துயிருமானாய்
புவனத்தின் கயவர்முகர் தமைப் பொடி செய்த
போதமெஞ்ஞான தேவி
புன்னெறிகளைந் தெனது நெஞ்சினிருந்து நீ
புதுமதுக கவியருள் வாய்
அவநீத மாயிருந்த வேழை யானுனை நம்பி
ஆற்றொணாப் பிறவிநோயில்
அவனியிலுதிக்க மிறக்கவும் விதியிதோ
அன்னையுன் மனங்கல்லோ
பாவநீக்கி யெனையாள அது தருணமம்மையே
பாலன் உமதடிமை யன்றோ
பகரவரு நெல்லண்டையில் மேவி வாழ்வுபெறு
முனிவர் தினம் துதித்து வரும்
வடபத்திரகாளி ஸ்ரீ வீரமாகாளி
யன்னையரும் குமாரர் தாழ் சரணே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈடு செய்ய முடியாத இழப்பு

' நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை என்னும்;
பெருமை உடைத்து இவ்வுலகு" - குறள்

இந்த உலகுக்கு உள்ள பெருமை யாதெனின் நேற்றிருந்தவர் இன்றில்லை. என்றும் நிலையில்லாத மனித வாழ்வு. இதனை வள்ளுவர் புகழ்வது போல இகழ்ச்சியாக உலகைப் பார்த்து ரைத்தார். இதற்கு வள்ளுவரும் விதி விலக்கு இல்லை. இவ்வுலகில் அவரவர் பிராருத்துவ வினைக்கேற்ப வந்து மிறந்து அவ்வினை நிறைவு செய்ய நீத்துச் செல்வது எமது சித்தாந்த உண்மை.

அந்த வகையிலே அமரர் கைலாசக்குருக்கள் அவர்களும் பண்பட்ட குடும்பத்திலே பிறந்து நல்ல தாய் தந்தையருக்கு பிள்ளையாக வளர்ந்து இடையிலே விதி வசத்தால் எம்மை விட்டு மறைந்தது ஆற்றொணாத் துன்பமே மனைவி மக்களுக்கும் உறவினர்களுக்கும் இது ஈடு செய்ய முடியாது இழப்பு இவ்வுலகில் வாழ வேண்டிய காலம் முடிந்ததினால் இறைவன் தன்னிடம் அழைத்துக் கொண்டான் என்பதுவே உண்மை.

"எழுதிச் செல்லும் விதியின் கை
எழுதி எழுதி மேற்செல்லும்
அழுதாலும் தொழுதாலும்
அதில் ஓர் எழுத்தும் மாறாது."

என்ற உண்மையை நினைத்து அமைதி பெறுவோமாக! அமரரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**த. கலாமணி**
**முதுநிலை விரிவுரையாளர்**
**(கல்வியியற் பீடம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "நன்னூலார் காட்டிய நல்லாசான்"

ஈழத்தமிழன்னை ஈன்று புறந்தந்த இன்கலைக்கோயில் அமரர் நமசிவாயக்குருக்கள் அவர்கள் புகழோடு தோன்றிய அதியற்புத ஆத்ம சிருஷ்டி மனித உருவிலே இம் மண்ணிலே மலர்ந்து கற்பக தருவாக விளங்கிய கலாவிருட்சம்.

அமரர் நமசிவாயம் அவர்களின் பரிமாணங்கள் பல்துறை சார்ந்தவை அவரது விழுதுகள் எமது மண்ணிலே பல துறைகளிலும் வேரூன்றி விட்டன. அமரர் நமசிவாயம் நன்னூலாரின் நல்லாசிரியருக்கு இலக்கணமாகவும் இலக்கியமாகவும் நடமாடிய பெருந்தகை நன்னூலார் கண்ட முதல், இடை, கடை, மாணவரின் குருவாக அவர் பள்ளியிலே பவனி வந்தார். உயர் வகுப்புகளில் தமிழ் மொழியையும் சைவத்தையும் போதித்து மாணவரிடையே அவர் புகழ்பெற்றார். இதனோடு பல மாணவரை பல்கலைக்கழக வாயிலிற் தடமிடச் செய்தார். இன்னும் வடமொழியறிவு பெற நாடியபலரை அவர் ஊக்குவித்து உரமூட்டினார்.

அமரரின் சோதிடப் பணி அவருக்கு மேலும் பெருமை சேர்த்தது. இத்துறையில் ஆழமான அறிவு பெற்ற அவர் இது பற்றிய அறிய விரும்பிய பலருக்குப் படகோட்டியாக விளங்கினார். அமரர் நமசிவாயம் அவர்களின் கிரியைகள் யாவும் உரிய முறைப்படியே நடைபெறுவதை அனைவரும் அறிவர். இத்தகு பல்துறை ஆற்றல்களும் நிறைந்த அமரரின் இழப்பு ஈடுசெய்ய முடியாததென்பதில் எவ்வித ஐயமுமில்லை. அவர் எமைவிட்டுப் பிரிந்தாலும் அவரது விழுதுகள் எம்மண்ணில் வேரூன்றி மணம் வீசுமென்பதில் எவ்வித ஐயமுமில்லை.

அவரது ஆத்மா சாந்தியடைக.

**வ. செல்வராசா**
**வலயக்கல்விப் பணிப்பாளர்**
**தென்மராட்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்ல சிந்தனை

சிந்தனைகள் ஒரு நாளில் பல ஆயிரக் கணக்கில் தோன்றுகின்றன. இவற்றுள் பயனுள்ள சிந்தனைகள், பயனற்ற சிந்தனைகள், நல்ல சிந்தனைகள், கெட்ட சிந்தனைகள் என்பன இருக்கவே செய்யும். ஒரு மனிதன் சாப்பிடுவது சிறிதளவு அரிசி, உடுப்பது பல்வேறு வடிவங்களில் நான்கு முழத்துண்டேயானால் அவன் மனதில் தோன்றிக் கொண்டு இருப்பதோ எண்பது கோடி எண்ணங்கள் சிந்தனைகள் என்று ஒரு பழம் பாடல் பின்வருமாறு கூறுகின்றது.

" உண்பது நாழி, உடுப்பது நான்குமுழம்
எண்பது கோடி நினைந்து எண்ணுவன - கண்புதைந்த
மாந்தர் தம் குடி வாழ்க்கை மண்ணிற்கலம் போல
சாந்துணையும் சஞ்சலமே தான்"

உயிரினங்களிலே மனிதனுக்குத்தான் சிந்தனை செய்யுமாற்றல் உண்டு. இதில் மனிதனுக்கு ஒப்பாகக்கூறு வேறு ஒன்றையுமே குறிப்பிட இயலாது.

சிந்தனைகளைத் தோற்றுவிப்பவனும் மனிதன் தான். அவற்றால் பயன்படுத்துபவனும் மனிதன் தான். அவற்றால் வரும் விளைவுகளை அனுபவிப்பவனும் மனிதன் தான். தனி ஒருவனின் மன எண்ணங்களே அவனது மேன்மையும் கீழ்மையும் தீர்மானிக்கின்றன. இதனால் தான் கணியன் பூங்குன்றன் அன்றே.

'யாதும் ஊரே யாவரும் கேளீர்
தீதும் நன்றும் பிறன் தருவாரா" என்றார்

வள்ளுவரும்

'தன்னைத்தான் காதலனாயின் எனைத் தொன்றும்
உன்னற்ற தீவினைப்பால்"

இதனாலேயே கீதையில் கண்ணனும்

"தத்பாவம் தத்பவதி" என்றார்

மனம் கொண்டதே மாளிகை என்று பெரியோர்கள் கூறியதும் இதுவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மனிதன் நல்லசிந்தனைகளைப் பற்றி சிந்திக்க வழக்கப்படுத்திக் கொள்வது ஒரு பழக்கமே அது அவனை வாழ்விக்கும் அவனைச் சார்ந்தவர்களையும் வாழ்விக்கும். இதை பழகிக் கொள்வதற்கு நல்லார் இணக்கம் சங்கத்தின் சேர்க்கை அவசியமாகின்றது. இதனாலேயே

'நல்லார் இணக்கமும் நின் பூசை நேசமும்"

எனக்கு வேண்டும் என்று பெரியோர்கள் பிரானைப் பணிந்தார்கள். இதற்கு மாறாக நல்லசிந்தனைகளற்றவர் சமூகத்தில் தீயவனாக சமூகத்தால் வெறுக்கப்படும் ஒருவனாக மாறுகின்றான். கோபம் கொண்ட மிருகங்களைவிட இவன் பார்ப்பதற்கே தகாதவன் என விலக்கப்படுகின்றான். ஔவையின் இந்த ஆராய்ச்சி அழகு தமிழில் கொப்பளிக்கின்றது.

'கொம்புதைக்கு ஐந்துமுழம் குதிரைக்குப் பத்துமுழம்
வெம்புகரிக்கு ஆயிரம் தான்வேண்டுமே - வம்புவெறி
தீங்கினர் தம் கண்ணீரில் தெரியாத தூரத்தே
நீங்குவதே நல்ல நெறி"

நாம் நல்லவர்களா தீயவர்களா நமது சிந்தனைகளே பதில் சொல்லட்டும்.

இது நிற்க: நான் வட்டாரக்கல்வி அதிகாரியாக இருந்த காலத்தில் 77,80க்குள் (கிட்டத்தட்ட) என நினைக்கிறேன். அக்காலத்தில் நமசிவாயக்குருக்கள் ஒழுக்க சீலனாய் ஆசிரியனுக்குரிய தகுதி பெற்று நல்லமுறையில் சேவை செய்ததை நானறிவேன். அவர் சிவபத செய்தி கண்டு நெஞ்சுருகி துணுக்குற்றேன். அன்னாரின் குடும்பத்தவர்களுக்கு அனுதாபத்தை தெரிவித்து அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறேன்.

மு. சிவானந்தம் M.A
ஓய்வு பெற்ற வட்டாரக் கல்வி
அதிகாரி
சங்கானை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "என்றும் நினைவோம்"

கரணவாய் குருக்கள் பகுதி எனும் கிராமத்தில் 02.03.1944ல் பிறந்தார். இவரது தந்தையார் திரு. கைலாயக்குருக்களால் நிர்வகிக்கப்பட்டு வந்து எமது பாடசாலையில் தனது ஆரம்பக் கல்வியை ஆரம்பித்தார். பின்னர் கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியில் H.S.C பரீட்சையில் சித்திபெற்றார். பின்னர் பண்டிதர் பரீட்சையில் முதல் தரத்தில் சித்திபெற்று அதன் பின் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையிலும் (விசேட இந்து சமயம்) சித்திபெற்று ஆசிரியர் தொழிலில் 1977ம் ஆண்டு இணைந்து கொண்டார். இவரது தமிழ் சைவ அறிவுத்திறனால் பின்பு சமய ஆசிரிய ஆலோசகராகவும் கடமையாற்றி உள்ளார். இவரது உடல் நலத்தை கருத்திற் கொண்டு இறுதியாக எமது பாடசாலைக்கு 1998 ஆவணியில் தன்னை இணைத்துக் கொண்டார்.

அவரது வரவால் எமது பாடசாலை பெருமை அடைந்துள்ளது. வாணி விழா, தமிழ்த்திறன் போட்டி, சஞ்சிகை ஆக்கம், இந்து மன்றம் போன்ற விடயங்களில் இவரது பங்களிப்பு அளப்பரியது. அன்னாரது தமிழ் இலக்கிய அறிவு, இலக்கண அறிவு, சமய அறிவு போன்றவை எமது சிறார்களின் ஆற்றலை மிகவும் வளர்த்துள்ளது. மாணவர்களின் வயதுக்கு ஏற்ப கற்பிப்பதில் வல்லவர். கதைகள் மூலமாகவே அவரது கற்பித்தல் நடைபெறுவதை என்னால் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

அன்னாரின் திறமைகளை சொல்லிமாளாது தமிழ் சைவத்தோடு நில்லாது சோதிட விற்பன்னர்களாக சமய சடங்குகளை நடாத்துவதில் விற்பன்னராக, பேச்சாளராக, பிரசங்கியாக, சமய ஆலோசராக, சமஸ்கிருத மேதையாக விளங்கினார். கரணவாய் குருக்கள் பகுதியின் தனித்துவத்தை உலகறியச் செய்தவர்களின் முதன்மையாளர் என்று கூறினால் அது மிகையாகாது. இவர் வடமராட்சியில் கால் பதிக்காத இடமே இல்லை என்றே கூறலாம். இவரது உள்ளம் வெள்ளை, அழுக்காறு, அவா, வாக்கு, வெகுளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

.இன்னாசொல் இவரிடம் நெருங்கவே முடியவில்லை. உள்ளத்தால் உயர்ந்தவர்களின் கூற்றைப் பின்பற்றி வாழ்வதால் மேன்மை கொள்ள சைவநீதி நெறி நின்று வாழ்தல். இன்னெறியில் வாழ்ந்தவர் நமசிவாயக் குருக்கள் அவர்கள்.

அன்னார் மதிப்புப் பெற்றமைக்கு இவரது துணைவியரும் உறுதுணையாக இருந்தார். இவர் இல்வாழ்க்கை இன்பமாக நடாத்தி நல்லறம் ஓங்கி நன் மக்களைப் பெற்று நட்புகழுடன் இறைவனடி சேர்ந்தார். அன்னார் எமது பாடசாலையிலே கல்வியை ஆரம்பித்து அவர் தனது 60வது வயதில் எமது பாடசாலையிலையே தனது ஆசிரியப் பணியை முடித்து 02.03.2004 ஓய்வு பெற்றுள்ளார். அவரது ஓய்வு நிரந்தர ஓய்வாக இவ்வளவு விரைவாக வரும் என்று யாருமே நினைக்காத ஒன்று.

அன்னாரது பொய்யுடம்பு அடங்கியது ஆயினும் கீதத்தின் நாதமாய் "பண்டிதர் நமசிவாயக்குருக்கள்" என்ற ஒலி ஒலித்துக் கொண்டேயிருக்கும். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவன் அருள் புரிவாராக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**யா/ கரணவாய் வேதரணியேஸ்வர வித்தியாலயம்.**
**குருக்கள் பகுதி,**
**கரவெட்டி.**

**ஆ. ம ஜெயவரதராஜா**
**அதிபர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைக்கின்றேன் சைவகுல திலகத்தை..

சாந்தம், எளிமை, அன்பு எண்ணத் தூய்மை சுய கட்டுப்பாடு இவை மனத்தின் தவங்கள் அத்தகு தவமகன், சைவத்தமிழ்க் காவலன் அமரர் கை. நமசிவாயக்குருக்கள் வெள்ளை வேட்டி சட்டை அவரின் ஆசிரியத் தோற்றம் வேட்டி சால்வையோடு பூநூல போட்டு வீபூதி அணிந்து தோற்றமளிப்பது அவரின் சைவத்தோற்றம். புன்னகை தவழும் முகம், கருணை பொழியும் கண்கள், கள்ளங் கபடமற்ற மனம், மன்னிக்கும் தன்மை அவரின் பண்பு இவர் எளிமையான வாழ்வும் உயர்வான உளவியல் நோக்கும் மானிடத்தின் உயர் விழுமியங்களின் கூட்டுருவாக தரிசனம் தந்து நடமாடிய சைவத் தமிழ்க் கனி.

அமரர் அவர்கள் தொண்டின் பிறப்பிடம், சேவையின் இருப்பிடம், சுருங்கக் கூறின் பல்துறைப் பணி புரிந்தவர். ஆசிரியர், ஆசிரிய ஆலோசகர், ஆசிரிய திராவிட பாசாவிருத்தி சங்கத்தில் நீண்டகாலம் பணியாற்றியவர். ஆசிரிய ஆலோசகர் சமய குரு சோதிட விற்பன்னர், தமிழ் சமஸ்கிருத மொழிகளில் பாண்டித்தியம் பெற்றவர். பண்டிதர், சைவப்புலவர், பயிற்றப்பட்ட ஆசிரியர் அவர் பணி பல அவற்றுள் இவை சில. அவர் சேவை கூறின் இறுதி மூச்சு வரைக்கும் தமிழையும் சைவத்தையும் வளர்க்க அரும் பாடு பட்டவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது பாடசாலையான விக்கினேஸ்வரக் கல்லூரியின் வளர்ச்சியில் அக்கறை உள்ளவர். இந்து நாகரீகத்தில் இருந்து சமய ஒழுக்கத்தை வளர்த்து ஆசிரிய ஆலோசகராக இருந்து இந்துசமயத்தை பாடசாலை தோறும் கற்பிக்க வழிகாட்டியவர். என்னைப் பொறுத்த மட்டில் நண்பனாய், மந்திரியாய், நல்லாசிரியனாய், பண்பிலே தெய்வமாகத் திகழ்ந்தவர். ஞானாசாரியர் காலூரி, விக்கினேஸ்வராக் கல்லூரி சமய விழாக்களின் போதெல்லாம் நான் கேட்டபோது மனமுவந்து மாணவருக்கு அரிய கருத்துக்களை வழங்கிய சொற்பொழிவாளர். அவரின் மறைவு உண்மையில் சைவத் தமிழ் உலகிற்கு பெரும் இழப்பு. அந்த இடம் வெற்றிடம் தான். அந்த வெற்றிடத்தில் கீதையில் மலர் ஒன்றை வைத்துத் தேடுகிறேன், தேற்றுகிறேன்.

"அத்மா கண்ணுக்கெட்டாததும், சிந்தனைக்கு அப்பாற்பட்டதும், மாற்றமுடியாததுமாகும். இதை நன்கறிந்து உடலுக்காக வருந்தாமல் இருப்பாயாக.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

திரு.அ. சிவசிதம்பரம்
அதிபர்
யா/விக்கினேஸ்வராக் கல்லூரி
கரவெட்டி.

# பண்பிலே தெய்வமாய்

பதவிகளாலும் பட்டங்களாலும் பலர் பெருமை அடைகின்றார்கள். சிலரால் பதவிகளும் பட்டங்களும் பெருமை அடைகின்றன. ஒரு பெரிய சமூகத்திலே இந்த இரண்டாம் பிரிவைச் சேர்ந்தவர்கள் விரல் விட்டு எண்ணக்கூடிய அளவினரே இருப்பார்கள். இவர்களில் அமரர் நமசிவாயக் குருக்களும் ஒருவர் ஆவார். அவர் எமது புற்றளை மகாவித்தியாலயத்தில் ஆசிரியராக கடமை புரிந்ததால் எமது பாடசாலை பெருமை பெற்றுக் கொண்டது என்பது மறக்க முடியாததும் மறுக்க முடியாததுமாகும். கிராமிய பாடசாலைகளிலும் பின்தங்கிய பாடசாலைகளிலும் வெற்றிடங்கள் நிறைய இருக்கும் வேளையில் அப்பகுதியைச் சேர்ந்த ஆசிரியர்கள் பலர் புகழ் பூத்த பெரிய பாடசாலைகளிலும் பட்டணப் பர்டசாலைகளிலும் போட்டி போட்டுக் கொண்டு பணிபுரியச் செல்வார்கள். ஏனென்றால் பெரிய பாடசாலைகளில் கற்பிப்பதால் அவர்களுக்கு புகழும் பெயரும் சேரும். அமரர் நமசிவாயக் குருக்கள் அவர்களுக்காக பெருமை மிக்க பாடாசலையின் கதவுகள் அகலத் திறந்து காத்துக் கிடந்தன. ஆனால் கிராமியப் பாடசாலையான எமது பாடசாலைக்கு மனமுவந்து வந்து பணிசெய்தார் என்பதை நாம் எங்கள் நெஞ்சங்களிலே நிலை நிறுத்தி என்றும் நன்றி மறவாது இருப்போம்.

1994ம் ஆண்டு சில ஆண்டுகள் இடைவெளியின் பின் மீண்டும் எமது பாடாசலையில் கா.பொ.த உயர்தரம் கலைவகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. ஏழுமாணவர்கள் மாத்திரம் இருந்ததால் தொகை காணாது என்று வகுப்பைத் தொடங்குவற்கு அனுமதி தருவதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயக்கம் காட்டப்பட்டது. எனினும் ஒருபடியாக ஒப்புதல் பெறப்பட்டு உயர்தர வகுப்பு தொடங்கப்பட்டது. எப்படியும் இவ் வகுப்பில் இருந்து பல்கலைக் கழகத்திற்குச் செல்ல வேண்டும் என்ற இலட்சிய நோக்குடன் ஆசிரியர்கள் கற்பித்தார்கள் அவ் வகுப்பு மாணவர்களுக்கு இந்து நாகரீகம் கற்பிக்கும் பொறுப்பை அமரர் நமசிவாயக் குருக்கள் ஏற்றுக் கொண்டார். சுமார் 25 - 30 மாணவர்கள் கல்வி கற்கும் பெரிய பாடசாலை கலை வகுப்புக்களோடு பெறுபேறுகளை பொறுத்த வரையில் இம் மாணவர்கள் முன்னிற்க வேண்டும் என்ற முனைப்போடு ஆசிரியர் கற்பித்த காலம் அது இது ஒரு எதிர்நீச்சல் என்பதை உணர்ந்து தன் உடல் நலக்குறைவையும் பொருட்படுத்தாது கரணவாயில் இருந்து துவிச்சக்கர வண்டியில் வந்து ஈடுபாட்டுடன் அவர் கற்பித்த காலம் எங்கள் பாடசாலையின் வரலாற்றில் ஒரு பொற்காலம் எனலாம். இக் காலம் இனி என்றும் திரும்பி வரப்போவதில்லை எனினும் இக்காலமும் குருக்களின் சிறந்த சேவையும் எங்கள் நெஞ்சங்களில் நீங்காத நினைவுகளாக நிலையான அழகுக் கோலங்களாக என்றும் பசுமையாக நிலைத்து நிற்கும்.

01.02.1995 தொடக்கம் 31.07.1998 வரை அமரர் நமசிவாயக் குருக்கள் எமது பாடசாலையில் கடமை புரிந்தார். அக்கால கட்டத்தில் பஞ்சநாதக் குருக்களும் இப் பாடசாலையில் கற்பித்தார். ஓய்வு நேரங்களில் நாங்கள் தத்துவவிசாரத்தில் ஈடுபடுவோம். வேத சூர்த்தங்கள், உபநிடத சுலோகங்கள் ஆகியவற்றைப் பற்றி எல்லாம் கலந்துரையாடுவோம். வேத ஆகமங்களில் அவருக்கு இருந்த ஆழ்ந்த புலமையும் ஈடுபாடும் அளப்பரியவை. பாடசாலையில் நடைபெறும் வெள்ளிக்கிழமை பிரார்த்தனைகளில் அவரது நற்சிந்தனை செவிக்குச் சிறந்த விருந்தாகும். நவராத்திரி விழாவில் அவருடைய பங்களிப்பு அதற்கு மெருகூட்டுவதாக அமையும் பாடசாலையின் சமய நிகழ்வுகளுக்குச் சிறந்த ஆலோசகராக விளங்கினார். அவருடைய நற்சிந்தனைகள் சிறுவர்களுக்கு சொல்லிய சிறுகதைகள் ஒன்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவில் அழியாதனவாய் நித்தியமானவையாய் அறிவூட்டி நிற்கும் எமது பாடசாலையை விட்டுப் பிரிந்த ஆண்டுகள் ஐந்து கடந்தாலும் நேற்று மாதிரி அவர் ஆசிரியர்கள் மாணவர்கள் நெஞ்சங்களில் நிறைந்து நிற்கின்றார். இன்று அவர் இல்லை என்ற சொல் நிஜமானதாகி விட்டாலும் அவருடைய நிறைவான சேவை எங்கள் பாடசாலைச் சமூகத்தில் எந்த நிலையிலும் அவருக்கு அழிவில்லை என்ற அமரத்துவ நிலையை ஏற்படுத்தி உள்ளது.

அன்பு, அறிவு, அடக்கம், எளிமை ஆகிய பண்புகளின் உருவமாய் எம்முடன் பழகியிருந்தவர் இன்று அமரராகி விட்டார். அவரது உயர்வை எடுத்துரைப்பதற்கு நாம் மகாகவி பாரதியின் வார்த்தைகளை கடன் வேண்டி நின்கின்றோம்.

"தாய் போல் பிரியமுற ஆதரித்து
நண்பனாய், மந்திரியாய் நல்லாசிரியனாய்
பண்பிலே தெய்வமாய் பார்வையிலே சேவகனாய்"

என்று பாரதி பாடிய வார்த்தைகள் கண்ணனுக்கு மட்டுமன்றி நமசிவயாக் குருக்களுக்கும் அவ்வாறே பொருந்தும் என்பதால் இவற்றை அவருக்கு காணிக்கையாக்குகின்றோம்.

'ஆன்மா அழிவதில்லை"

என்ற கண்ணனின் கீதோபதேசத்தில் நம்பிக்கை கொண்ட நாம் அதைக்கொண்டு ஆறுதல் அடைவோம் ஆக.

"நமச்சிவாயவே ஞானமும் கல்வியும்"

**புற்றளை மகாவித்தியால**
**சமூகத்தின் சார்பில்**
**அன்பின் தா. ஜெயவீரசிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவத் தமிழ்ப் பணியில் ஆசான்......

காலை ஓட்டத்தின் ஊடாக நாம் பல வெகுமதிகளைப் பெற்றிருக்கின்ற போதிலும் பல இழப்புகளை சந்திப்பதும் தவிர்க்க முடியாததாகி விடுகின்றது. அந்த வகையில் அண்மையில் தனது வாழ்வை முடித்துக் கொண்டு கலைமகளிடத்தே சரண்புகுந்த அமரர் நமசிவாயக் குருக்கள் அவர்களுடைய இழப்பு ஈடுசெய்யமுடியா ததாகின்றது. என் அன்புக்குரிய ஆசான் அவர்களின் இழப்பில் இவ்விடம் வெறுமை பெற்றிருக்கின்றது. சோதிடம், கலை இலக்கியம். சைவம் போன்ற துறைகளை அவரைத் தவிர வேறு எவராலும் ஈடுசெய்ய முடியாத ஓர் இடத்தை எவ்வாறு பெற்றுக் கொண்டார் என்பதை ஆராய்வது சிறந்தது என நினைக்கின்றேன். சைவக் குடும்பத்தில் பிறந்த எனது ஆசான் இயல்பாகவே சைவப் பணி செய்வதிலே மிகுந்த ஈடுபாடு பெற்று விளங்கினார். "தோன்றிப் புகழொடு தோன்றுக" என்ற வாக்கிற்கிணங்க வாழ்ந்து காட்டியவர் ஆசிரியர் என்ற சொல்லிற்கு இலக்கணமாக வாழ்ந்ததுடன் இவருடைய சாந்தமான குணம், கருணையான பார்வை, நிறைந்த மனத்துணிவு, கனிவு குறையாத இனிமை, பேச்சு பொன்னகையை விட புன்னகையே நான் இவரிடம் கண்ட மதிக்கத் தக்க பண்புகளாகும். பன்முக ஆளுமை உள்ளதை உள்ளபடி கூறுகின்ற நடப்பியல் பண்பு வயது வேறுபாடின்றி சமநிலை மனித நேயத்துடன் தோழமையாக பழகும் பண்பு போன்றவை நான் இவரிடம் கற்றுக் கொண்ட பேறாகக் கருதுகின்றேன்.

சோதிடத்தை தன்னுயிராய் நினைத்துப் போற்றிய இவர் அந்தக் கலையை ஒருபோதும் யாருக்காகவும் விலைபேசியதும் கிடையாது. அந்த பொக்கிசத்தை தூய்மை கெடாது பேணிய பெருமை அவரையே சாரும் இந்து நாகரீகம், இந்து சமயம், போன்ற பாடங்களை கற்பிப்பதில் அவருக்கு யாரும் ஈடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணையில்லை எனது ஆசானின் மறைவு மாபெரும் இழப்பு அவருடைய ஆக்கம் நூலுருவில் வெளிவரவில்லை என்பது பலரது ஆதங்கம் காற்றோடு கலந்து கதையாய் போயிடுமே என்ற கவலை பிறக்கிறது. அவருடன் பழகியவர்கள் அவர் சிரிக்க வைக்கச் சொன்னவற்றை சிந்திக்கவும் வைத்தன.

இவ்வாறு மகத்துவம் மிக்க ஒரு ஆசான் இன்று நம்மிடத்தில் இல்லை. ஆனாலும் அவர் புகழ் மங்காத்தன்மை பெற்று தமிழ் பேசும் நல்லுலகம் உள்ளவரை வாழ்வு பெறும்.
"தக்கார் தகவிலார் என்பது அவரவர் எச்சந்தாற் காணப்படும்" வள்ளுவர் கூற்றுக்கமைய ஆசான் இவ்வுலகில் விட்டுச் சென்ற மாணவர் பரம்பரை அவரைத் தக்கவனாக இனம் காட்டும் என்பது திண்ணம் ஆசானின் ஆத்மா மக்களிடத்தே இறவாத இன்ப அன்பு பெற பிரார்த்தித்து நிறைவு செய்கின்றேன்.

நெல்லியடி,
கரவெட்டி.

க. சத்தியசீலன்
ஆசிரியர்
உடுத்துறை
மகாவித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்துவிதமான சீர்

முத்தமிழ் வித்தக, மும்மொழிப் பண்டிதர், முப்பொருள் விளக்கும் முக்கரணச் சித்தர் (திரிகரண சுத்தர்), முக்காலும் முனிபவர், கிரிகைகள் சிகரம், கிரிகைக்குச் சிகரம் சாய்த்தது, எம்மையெலாம் பொருட்பிரபஞ்சத்துள் ஏய்த்தது, ஆனால் அருள் பிரபஞ்சத்துள் ஆழ்த்தியது. (மருள்நீக்கி மறையோ திதிகாச புராணத் தெருள்தீத்தி தூயன் பருள்தோய்த்த மழை ஓய்ந்து விட்டது. சொல் பொருட் பிரபஞ்சங்கள் சொல்லாமல் ஸ்தம்பித்தது. விட்டில் வட்டன்களை திசைகாட்டி இயைவாக்கிய இறைகாட்டும் ஒளிக்கூட்டின் இழுமென் கவியின் இலக்கண வழுவா? இலக்கியப் பழுதா? இருக்காதே என்னதான் ஆயிற்று? இலக்கணம், பூரண இலக்கியம் மௌன ஓட்டம் ஆனது. திருவாயால் திருமூர்த்திகளை திசையெலாம் தெருநாளும் (மருள்நீக்கிப்) தெருணூற உபந்நிய சித்த உத்தமோத்தமக் குருக்கள் பண்டிதர், அன்பர். நண்பர், ஆசிரியர், நற்குடும்பத் தலைவர் சிவ சம்பந்தமானது ஆத்மார்த்த ஆசனத்துள் ஒளிரும் பிரத்தியஷ்ச மாகையால் பூரணத்துள் பூரணத்தை புரிந்து கொண்ட மூகூர்த்தம் கைலாசக்குருக்கள் நமசிவாயக்குருக்கள் சிவாயநமவான சீரை அத்துவித வஸ்துவொடு அத்துவிதமான சீரைத் தேடியது ஆடியமாவாசை திதியாய் எட்டியது.

மண்ணுலகு மாட்சியொடு மட்டுமன்றி மும்மொழியை
விண்ணுலகும் வித்துவ வீரயமுற - பண்டிதனார்
தாரணை யாடியமா வாசைத் திதிசென்று
பூரணமாய்க் கொண்டார் புகழ்.

- திவ்யாதங்கள் -

எனினும் எக்குடும்பத்தார்க்கும் ஈடு இணையிலா இழப்பைப் பொறுத்துக்கொள்ளும் பயிற்சி தந்த ஆசான் வழி அவர் குடும்பமும் பயில வழி அன்பு மொழி

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சத்து நீங்கா நினைவுகள்

தமிழ் மறையாம் தேவாரப் பதிகங்களைத் திருநாவுக்கரசரும் திருஞானசம்பந்தரும் பாடியருளியதனைத் தம் திருச்செவி மடுத்து, வடமொழி மந்திரங்களாற் பூட்டப்பெற்றிருந்த தமது திருக்கோவில் திருக்கதவினைக் காப்பு நீங்குமாறும் காப்புக் கொள்ளுமாறும் திருவருள் பாலித்த பெருமான் அருள்மிகு வேதாரணியேஸ்வரர் அப் பெருமானை அர்ச்சிக்கும் பேறுபெற்ற குருக்கள் பரம்பரையினர் தான் கரணவாயில் வாழ்ந்து கொண்டு வருபவர்கள்.

இத்தகைய மரபில் உதித்தவர் சிவஸ்ரீ. திருஞான சம்பந்தக்குருக்கள் கைலாசநாதக்குருக்கள். இவரின் வாழ்க்கைத் துணைவியார் அமிர்தவல்லியம்மா அவர்கள். சிவநெறிச் செம்மல்களாகிய இவர்களின் அருந்தவப் பயனால் உதித்தவர்கள் சிவஸ்ரீ திருஞானசம்பந்தக்குருக்கள், சிவபதம் எய்திய சிவஸ்ரீ செவ்வந்தி நாதக்குருக்கள், சிவஸ்ரீ நமசிவாயக்குருக்கள் வவுனியா மாவட்டச் செயலக எழுதுவினைஞர் திரு. சுப்பிரமணியம் அவர்கள்.

சிவநெறி புரக்கத் தோன்றிய நமசிவயாக்குருக்கள் கரணவாய் தாமோதர வித்தியாசாலையிலும் கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியிலும் பயின்று, யாழ்ப்பாணம் ஆரிய, திராவிட பாஷாவிருத்திச் சங்கத்தினரின் தமிழ் பண்டித பரீட்சையில் தேறியவர். குருக்கள் ஐயா அவர்களுக்கு அருமருந்துணைவியாரானவர் சிவஸ்ரீ கனகசபைக்குருக்கள் தியாகராஜாக்குருக்கள், ஞானகம லாம்பிகையம்மா தம்பதியினரின் அருந்தவ மகளாய் உதித்த புவனேஸ்வரியம்மா அவர்கள். இவர்களது தவப்பேறுகளாய் உதித்தவர்கள். திரு.ந. வைத்தீஸ்வரன்(பிரான்ஸ்) செல்வி ந.மாதினி (ஆசிரியை பரமானந்தா ஆச்சிரமம்) செல்வி. ந. பாமா(யாழ் பல்கலைக்கழக மாணவி) செல்வன். ந. வாகீஸ்வரன் (ஜெயா இரும்பகம்) செல்வி. ந. சூரியா (வடமராட்சி மகளிர் கல்லூரி மாணவி) என்போர் ஆவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருக்கள் ஐயா அவர்கள் துணுக்காய் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, கரவெட்டி விக்கினேஸ்வரக் கல்லூரி, புற்றளை மகாவித்தியாலம், கரணவாய் வேதாரணியேஸ்வர வித்தியாலயம் ஆகியவற்றில் சிறந்த சேவையாற்றி 2004ம் ஆண்டு மாசி மாதம் ஓய்வு பெற்றார். கரவெட்டி அந்திரான் முருகையன் கோவில், கரணவாய் மூத்தவிநாயகர் ஆலயம் ஆகியவற்றில் பிரதமகுருவாகவும் உடுப்பிட்டி விஸ்வகுல வீரகத்தி விநாயகர் ஆலயம், உடுப்பிட்டி பத்திரகாளி அம்மன் அலயம், வல்லை வாழி சர்வசித்தி விநாயகர் ஆலயம் ஆகியவற்றில் மகோற்சவ கால குருவாகவும் விளங்கியவர்.

குருக்கள் ஐயா அவர்கள் யாழ்ப்பாணம் ஆரிய திராவிடா பாஷாவிருத்திச் சங்கச் செயற்குழுவில் பிரபல்யராக விளங்கியவர். வடமராட்சியில் இயங்கி வந்த பண்டித தேர்வு நாடிகளை பயிற்றும் வகுப்புக்களுக்கு முதன்மை ஆசிரியராக நின்று நடாத்தியவர். சந்நிதியான் ஆச்சிரம சைவ, கலை, பண்பாட்டுப் பேரவையின் போஷகரில் ஒருவராக விளங்கி ஞானச் சுடர் சஞ்சிகைக்கு கருத்தாழம் மிக்க ஆக்கங்களை வழங்கியவர். தாம் ஆற்றி வந்த குருத்துவப் பணிகளில் தமது திவ்வியத்தினைப் புலப்படுத்தியவர்.

இங்ஙனமாக தமிழுக்காகவும் சிவநெறிக்காகவும் திரிகரண சுத்தியுடன் தமது வாழ்வினை அர்ப்பணித்து நின்ற குருக்கள் ஐயா அவர்களின் மறைவு எவ்விதத்திலும் ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும். குருக்கள் ஐயா அவர்கள் சிவபரம் பொருளுடன் தாடலை போற்றி கூடி பேரின்ப பெருவாழ்வு பெறுவர் என்பது திண்ணம்.

இமையாணன் கிழக்கு,
வல்வெட்டித்துறை.
பண்டிதர். க. முத்துவேலு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கும் எங்கள் பேராசான் தமிழ் பாடிக்கொண்டே இருப்பான்.

புன்னகை தவழும் முகம், கருணை சொரியும் கண், எல்லோரையும் ஈர்க்கும் அன்பு கலந்த சொல்லாட்சி, சொற்பிறப்பில் உள்ள நேர்த்தி நயப்பு, நாகரீகமாக நகைச்சுவை ததும்ப வெளிவரும் வார்த்தைகள் இவரை இவ்வுலகிற்கு நற்குருவாய், ஆன்மீக சிற்பியாய், நல்லாசானாய், பேச்சாளனாய் இத்தனைக்கும் அப்பால் ஆசிரிய ஆலோசகராய் மிளிரவைத்தன என்றால் மிகையல்ல.

"அன்பினாலே அகிலத்தை ஆழலாம்" என்பதை வார்த்தையில் மட்டுமன்றி தமது கல்வி வாழ்க்கையிலும் காட்டியவர். எமது பேராசானைப் பொறுத்தவரை இவர் ஒரு மாணவனையோ அல்லது மாணவியையோ நோக்கி சீறி எழுந்ததும், சினந்து பேசியதும் தடி எடுத்ததும் தண்ட நீதி வழங்கியதும் நாம் நம் வாழ்வில் காணாதவை. சுருங்கச் சொன்னால் மாணவர்களை அவர் தம் அன்புக் கட்டளையால் ஆக்கிரமித்துக் கொண்டார் என்றே கூறலாம்.

எங்களுடைய குருநாதரின் கற்பித்தல் முறையைப் பொறுத்தவரை அது சற்றுவித்தியாசமானதே. இவருடைய கற்பித்தல் பாங்கு கற்பித்தலோடு இயைந்ததாக மூன்று தன்மைகளைக் கொண்டு விளங்கியது. ஒன்று இவரிடம் கல்வி கற்ற மாணவர்கள் கல்வியை மட்டும் பெற்றவர்கள் அல்ல. மாறாக அறஒழுக்க சிந்தனையோடு அனுபவம் சார் ஆசிரியரின் எண்ணக்கரு என்பன இவரது கற்பித்தலில் கலந்தன. அடுத்து கல்வி என்னும் துறையில் இயலாதவர்கள் என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனங்காட்டப்படும் மெல்லக் கற்கும் வினைத்திறன் உடைய மாணவர்களின் உள்ளத்தை அறிந்து கற்பிக்கும் உன்னத ஆசிரியர்களாக விடியலில் ஒளிக்கீற்றாக இவர் விளங்கினார். மூன்றாவதாக எங்களுடைய பேராசான் கற்பிக்கின்ற பொழுது கற்கும் மாணவர்களுக்கே ஆசிரியத்துவம் பற்றிப் பேசுவார். அதாவது ஆசாரியத்துவம் எப்பொழுது வெற்றி பெறும் ஓர் ஆசிரியன் என்பவன் எப்படிப் பட்டவனாக வாழ வேண்டும். முதலிய போசனைகள் எங்கள் ஆசான் கற்பித்தலில் நடம் புரிந்தன. இத்தனைக்கும் அப்பால் இவர் கற்பித்தலோடு மட்டும் நின்று விடாது. சிறந்த பிரசங்கியாராய், பட்டிமன்ற நடுவராய், கவிஞராய், பேச்சாளராய், போட்டிகளின் நடுவராய், பண்டிதராய் ஆலயக் குரு என பல கோணங்களில் தனது பார்வையைச் செலுத்தி வாழ்வின் வரலாற்றுத் தடங்களின் பதிவுகளாகி வாழ்ந்து கொண்டு இருப்பவர்.

எங்களுடைய பேராசானாய் நானும் என்னுடைய சக மாணவர்களும் முதன் முதலில் சந்தித்தது அவர் ஆசிரிய ஆலோசகராய் ஆசிரியர்களை பரிசீலிக்க வந்த சந்தர்ப்பதிலேயே ஆகும். உண்மையில் ஒரு ஆசிரிய ஆலோசகர் எங்களுடைய நிலைக்கு இறங்கி வந்து எங்களோடு அளவளாவியதை நாம் வேறு எந்த ஆசிரிய ஆலோசகரிடமும் கண்டதில்லை. பின்நாளில் இவரே எங்களுடைய தமிழ் ஆசிரியராய் உயர் தரத்தில் இந்து நாகரிகத்துறை ஆசிரியராய் மிளிர்ந்தார்.

“எங்களது ஆசான் எங்களுக்கு கற்பித்த ஒவ்வொரு விடயமும் பசுமரத்தாணி போல உள்ளத்தில் பதிந்து கிடக்கின்றது.” உதாரணத்திற்கு ஒன்றை சொல்கிறேன். மனித நேயம், நட்பு, அன்பு என்பவற்றின் இளையோட்டங்களை நாம் கங்கையில் விடுத்த ஓலையில் காண்கிறோம். அந்த பாடத்தினை ஆசிரியர் படிப்பிக்கிற போது உண்டான உத்வேகம் அந்தப் பாடலை உச்சரித்து விளங்கப்படுத்துவதில் உண்டான ஓசை நயம் இப்பொழுதும் எந்தன் செவியை முத்தமிட்டுக் கொண்டு இருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மாணியென் வாழ்க்கை முற்றும் இலக்கண நூல் பயின்றோன்
வானகத்தும் அது பயில்வான் என்னும் உண்மை தெளிந்தே
பாணினி தொல்காப்பியம் சீரபதஞ்செலி வாழுலகு
படர்ந்தனன் என் நண்பன் எனும் பாண்மையினை உணர்ந்தேன்"

இங்கு எங்களுடைய குருநாதன் கூறியது போல தமிழுக்காக தங்களை வருத்திக் கொண்டாவர்கள் மறுமையிலும் தமிழ் பாடிக்கொண்டே இருப்பார்கள். எனவே அந்த வரண் முறையில் பாணினி தொல்காப்பியர் வாழும் உலகில் எங்களுடைய ஆசானும் சென்று சேர்ந்திருப்பார். என்ற நம்பிக்கையில் அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடுபத்தினருக்கு தேறுதல் வார்த்தை கூறுதல் அன்றே. வேறு ஒன்றறியேன் நிறைவாக எங்களது பேராசான் அது ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்து அமைகின்றேன்.

நன்றி

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கோ. கோகிலரதன்,
கலைப்பீடம்,
யாழ் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தத்துவ ஞானக் கோயில்

அன்பு நடமாடிய அருள் ஒழுகும் ஞானக் கலைக்கோயிலின் தரிசனம் மறைந்து விட்டது. ஆனால் அகக்கண்களின் பிரத்தி யட்சத்திலே இன்னொரு காட்சிக்கு அது இடம் விட்டுச் செல்லவில்லை. ஆர்வலர் ஆத்ம ராகங்களிலே அது ஊன் கலந்து உயிர் கலந்து உவட்டாமல் அத்துவிதமாகிவிட்டது இதய சங்கமத்திற்கு உவப்பத்தலை கூறலேயன்றி உள்ளப்பிரிவு இல்லை. நமசிவாய என்ற சீவாத்மா சிவாய சிவஎனப் பரமாத்மா ஆகி விட்டது. இவை எல்லாம் மெய்யுணவர்வு பற்றிய கலைக் களஞ்சியங்கள்.

உலகியல் நோக்கிலே குருக்களின் அமரத்துவம் கூட்டி உள்ள முகாரிராகத்தின் அவலத்தைத் தாங்கும் வல்லமை இதயம் உள்ளவர்கள் எவருக்கும் வாய்த்திருக்கும் எனத் தோன்றவில்லை. மலர்ந்தும் மலராத குருக்களின் குடும்பல அவலம் ஒரு புறம் தெரியாமல் தெரிந்த இந்துமதக் கிரியைகளுக்குப் பிரயோக ஞானமுள்ளோர் வெற்றிட ஏக்கம் மறுபுறம், அவலமே சூழ்ந்த வாழ்க்கைக் கடலில் திசை தெரியாது தடுமாறும் மனிதர்களுக்கு எதிர்வு கூறிய சோதிடக் கலங்கரை விளக்கம் அணைந்தமையால் ஏற்பட்ட சோகம் இன்னொரு புறம். தெய்வ மொழியாம் வடமொழியின் வாசனை கமிழ்ந்த சோலைவனம் பாலைவனமாக மாறிவிட்டதால் ஏற்பட்ட வெறுமைத்துயர் மற்றின்னோர் புறம்? யாப்போ அணியோ? சொல்லோ பொருளோ சங்கமித்த தமிழ்த் தாயின் கவின் காட்ட வல்லாரே. அருமை வேறின்னோர் புறம் அனைத்துக்கும் மேலாக அருளும் அன்பும் ஆரோகணித்து நின்று புன்முறுவல் பூக்கும் வதன மலர், மானிடத் தெய்வத்தின் தரிசனம் இனி எங்கே. எங்கே? நாம் எங்கே?

விக்கேஸ்வர மாதாவின் பாதக் கமலங்களில் சிந்தனை மலர் சிந்தும் போது ஒன்றான நாம் என்றும் ஒன்றாகவும் இதனாகவும் வேறாகாமலும் இருந்தோம். ஆனால் குருக்கள் புத்திஜீவிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவருக்கும் நண்பனாகவும் மந்திரியாகவும் நல்லாசிரியனாகவும் பண்பிலே தெய்வமாகவும் மிளிர்ந்தார். குருக்களை விட பெரியவர் யார் எனில் குருக்களே தான் என்பது எனது உளச்சோதனையின் சத்தியம்.

கலைமகளின் கடைக்கண் வீச்சு என்று கிடைத்த அன்பு உள்ளத்தை திருமகள் நாடித் தேடிவரும் தருணத்தில் அலைமகள் காதல்கொண்டு விட்டாள். அருள் அமுதம் வழங்கிய அற்புதத் தெய்வம் மறு புறம் உடல் வருத்தம் சுமப்பதை கண்டு சிந்திய கண்ணீர் ஓய்ந்து விடவில்லை. தீயன எல்லாம் நல்லனவாக, நல்லன எல்லாம் தீயன ஆயிற்றே. திருவேறு தெல்லியராதர் வேறு, இதுவே இரு வேறு உலகத்து இயற்கையாயிற்றே.

உள்ளம் ஆறுதலடைய மனம் திறந்து பேச ஒரு உள்ளம். ஆம் நம்மோடு நடமாடி ஒரே உள்ளம். தமது இலட்சியம் பயணத்தை முடித்துவிட்டது. கல்யாணி ராகமொலித்த ஆலயம் அவலக் கடலால் சூழப்பட்டு விட்டது. ஆறுதலுக்கு இனி யார்?

நவரத்தினம்
ஓய்வு பெற்ற ஆசிரியர்,
நெல்லியடி, கரவெட்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருவே நமஹ.

பழம் பெருமை மிக்கவேதாரணியம் மரபில் உதித்து ஆத்மீக நற்பதியாகிய கரணவாயில் வதித்து செந்தமிழிலும் வடமொழியிலும் நிரம்பிய பாண்டித்தியம் பெற்றிருந்தவராகிய சிவஸ்ரீ கைலாசநாதக்குருக்களின் கனிஷ்ட புத்திரன் பண்டிதர் நமசிவாய க்குருக்கள் அவர்களின் மறைவானது தமிழ் சைவ உலகினிற்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். குருக்கள் ஐயா அவர்களின் கருத்தாழம் மிக்க இலக்கிய சமயசொற்பொழிவுகளை யனலஞ்சமாக நிகழ்த்துகின்ற அழகினை என்றும் எம் இதயத்தில் பதித்தவராகவே உள்ளோம்.சாதாரண மாணவர்களையும் எமது சமய மரபில் நெறிப்படுத்தி நின்ற பெருஞ்சிறப்பினையும் நினைவு கூருகின்றோம். சந்நிதியான் ஆச்சிரம சைவ, கலை, பண்பாட்டு பேரவையின் போஷகரில் ஒருவராக பணியாற்றியவர். ஆச்சிரமத்தின் மாதச் சஞ்சிகையாகிய ஞானச் சுடருக்குச் கருத்தாளம் மிக்க கட்டுரைகளையும் வழங்கிக் கொண்டிருந்தவர். குருக்கள் அவர்களின் திடீர் மறைவால் ஆறாத்துயர் மூழ்கி நிற்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

ஆசிரியர்
சி. இராமகிருஸ்ணன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது அன்புக்கும் மதிப்புக்கும் உரிய ஆசிரியர் உறவினரைப் பற்றி நினைவில் நின்றவை சில...

எவ்வூர் மக்களாலும் என் உறவினர்களாலும் ஒரே முகமான மதிப்புக்கும் நம்பிக்கைக்கும் உரியவரான எனது ஆசிரியர் உறவினர் திரு. கை நமசிவாயக்குருக்கள் மக்களின் குருவாக, சோதிடராக, ஆசானாக ஆலோசகராக விளங்கியவர். தனது 60 வயதிலே எம்மை விட்டு இறைவனிடம் சென்றது எமக்கு அதிர்ச்சியாகவே இருந்தது. தனது வாழ்விலும் தாழ்விலும் இன்முகத்துடன் கூடிய அவருடைய வரவேற்பு விருந்தோம்பல் எம் கண்ணை விட்டு அகலவில்லை நாம் பிளையான வழிகளில் சென்றால் கூட புத்தி சொல்பவர். இதை இப்படிச் செய்தால் நல்லது. இதைச் செய்யாதே என நன்மை, தீமைகளை சிரித்துக் கொண்டே விளக்குவர். சோதிடம் சொல்வது எப்பவும் பொய்க்காது. அன்பான உறவினரே உங்களை எங்கணமும் மனதாலும் செயலாலும் நினைவு கூரும்.

அன்பு மனையாள், பிள்ளைகளைத் தவிக்கவிட்டுச் சென்றது இன்னும் பெரிய கவலையாக உள்ளது.

அன்பு, மாணவி, உறவினர்,<br>
வி. புவனேஸ்வரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Sri chandramouleeswaray Namaha
Sri Sankara Bhaghavadpodacharaya Baram Baragatha
Moolamnaya Sar Vahnapeeta
His Holiness Sri Kanchikumakoti Peetadhipathi
Jagoguru Sri Sankaracharay Swamigal
Srimathm Samsthanam
Ceylon Hindu Priests Council
" SIVAGRI" KAPAY SOUTH, Kopay.

# விநாயகரும் தமிழ் மொழியும்

காலாச்சாரத்தில் பாசை முக்கியம். அதை வைத்துத் தானே சமய சம்பந்தமான நூல்கள் அறிவை வளர்த்துக் கொடுக்கும் நூல்கள் மனசுக்கு ரஞ்சகமான மற்ற, கதை, கவிதை, காவியம், எல்லாம் அப்படியிருக்கப்பட்ட தமிழ்ப் பாசைக்கு விக்கினேஸ்வரர் ரெம்ப முக்கியம். எது ஒன்று ஆரம்பித்தாலும் கடைக்குச் ஸாமான் லிஸ்ட் ஒன்று எழுதினால் கூட சரி முதலில் என்ன பண்ணுகிறோம் "பிள்ளையார் சுழி" என்றுதானே போடுகிறோம். எடுத்துக் கொண்ட காரியம் கழித்துப் போகாமல் இரசித்துக் கொடுப்பத்றாக முதலில் பிள்ளையார் சுழி என்ற அர்த்தத்தில் சமஸ்கிருதம் உட்பட இந்த தேச பாசைகளில் வேறெதிலும் இப்படி மங்களாரம்ப சிம்பவாக ஒன்றில்லை. இது தமிழ் மொழியின் பாக்கியம். "பாக்யதை" என்று சொல்லி சண்டைகிளப்பாமல் "பாக்யம்" என்று சொல்லி நமஸ்காரம் பண்ணுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தமிழை அவர் ஆதியிலேயே மேருமனலியில் எழுதயிருக்கிறாரென்று ஒரு அபூர்வமானதகவல் அருணகிரிநாதர் கொடுத்திருக்கிறார். திருப்புகழ் பாராயணம் ஆரம்பிக்கும் போது பாடும் 'கைத்தல நிறைகனி' பாட்டில்

முத்தமிழ் அடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே

என்று ஒரே "மு" மயமாக மோனை வைத்து பாடியிருக்கிறார். எவ்வளவோ, தேடியும், விஷயம் தெரிந்த புலவர்களைக் கேட்டுங்கூட 'அல்யூஷன்' (பாடல் குறிக்கும் பூர்வகதை) அகப்படவில்லை. ஆகக் கூடிங்யாஸருக்காக பாரதம் எழுதுவதற்கு முந்தியே 'முற்பட" என்று பாட்டில் வருவதிற்கேற்ப பிள்ளையார் இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழ் எழுதியனவாக ஏற்படுகிறது.

படிக்க ஆரம்பித்தவுடனேயே நாம் கற்றுக் கொள்வது ஔவைப் பாட்டி உபதேசங்களைத்தான், அந்தப்பாட்டி யாரென்றால் பிள்ளையாரின் பரமபத்தனும் என்றவள். கற்றுக் கொடுத்து நாம் குழந்தையாக இருக்கும் போதே பாடம் பண்ணுகிறோம். "வாக்குண்டாம்" வாக்கு உண்பாடும் வாக்குட்டுந்தானா? சும்மாவுக்காக வாக்கு பேச்சு அழகாக ஜோடித்து விட்டால் போதுமா? நல்ல மனயைப் பெற்று அந்த மனசிலிருக்கின்ற நல்ல எண்ணங்கள், கருத்துக்கள் வாக்கில் வந்தால்தான் நமக்கு புண்யம். பிறத்தியாருக்கும் உபகாரம்? அந்த நல்ல மனசு இன்னும் வாழ்க்கை சௌக்கியமாக அமைவதற்கு தேவையான லக்சுமி காடாஷம் எல்லாமே ஒரே குறியாக தப்பாமல் என்று போட்டிருக்கிறார். அவள் தான் போட்டாளே அதுவேதான் விழுந்ததோ! ஒரே குறியாக அவர் பாதத்தைப் புஷ்பார்ச்சனை பண்ணிப் பிடித்து விட்டவர்களுக்கு கிடைத்து விடும் என்று அந்தப் பாட்டி நமக்குப் பாடிக் கொடுத்திருக்கிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்குண்டாம் நல்ல மனம் உண்டாம். மாமலராள்
நோக்குண்டாம் மேனிநுடங்காது பூக்கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கையான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு.

"மேனி நுடங்காது" என்றால் சரீரத்தைக் கஸ்டப் படுத்திக் கொள்ளாமல் என்று அர்த்தம் பிள்ளையாரை உபாசிக்கிறதற்குப் பெரிசாக ஒன்றும் ஹடயோகம் பட்டினி உபவாசமெல்லாம் வேண்டாம் உடம்பை சிரமப்படுத்திக் கொள்ளாமல் நாலுபூவை பறித்துப் போட்டு விட்டால் போதுமென்கிறாள். துப்பார் திருமேனி என்றால் பவளம்மாதிரிச் செக்கச் செவேவென்று அவர்சரீரம் இருப்பதாக அர்த்தம் பவளம் மேனி என்று அப்பர் சுவாமிகள் நடராஜாவைச் சொன்னாற் போலவே அந்த அப்பனுடைய பிள்ளையும் இருக்கிறார். ஆனால் தாயைப்போலப்பிள்ளை என்று தானே வசனம் என்றால் அந்தத் தாயாரும் நம்முடைய காமாஷியாயிருக்கிறபோது செக்கச் செவேல்தான்!

நாராயண ஸ்மிருதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமுறைகள்

தெய்வ மணங்கமழ் திருமுறைகள் பன்னிரண்டும் அருட் செல்வங்கள், முறை என்னும் சொல்லுக்குச் செல்வம் என்னும் பொருளும் உண்டு. பன்னிரண்டு மாதங்கள் கருவில் வளர்ச்சியைத் தூண்டும் என்பதற்கு ஐயமில்லை. தெய்வீகம் பூரணம் அடைவற்குப் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை கும்பாபிஷேகம் செய்ய வேண்டும் என்பதை ஆகமங்கள் அறிவிக்கின்றன. தாயின் வயிற்றில் எனப் பிரித்து உணரப்படுகிறது. இவ்வகையில் பன்னிரண்டு என்னும் எண் முக்கியத்துவம் அடைவதைக் காண முடிகின்றது.

இன்னொரு வகையில் இறைவனது பஞ்சப் பிரம மந்திரங்களும் அங்க மந்திரங்களுமாக பதினொன்றின் அடைவாகத் திருமுறைகள் வகுக்கப்பட்டன. பன்னிரண்டாவது திருமுறை சோழ மன்னால் சேர்க்கப்பட்டது. நம்பி வகுத்த திருமுறைகள் பதினொன்று என வரலாறு விரித்து உரைக்கப்படுகிறது. ஈசானம், தற்புருடம், ஆகோரம், வாமதேவம், சத்ஜோஜாதம் என்பன பஞ்சப் பிரம மந்திரங்கள், இருதயம், சிரசு, சிகை, கவசம், நேரத்திரம், அஸ்திரம் என்பன சடங்கு மந்திரங்கள். எனவே மந்திரங்களின் அடைவே திருமுறைகள்.

இன்னொரு வகையில் நோக்கும் போது பஞ்சதோத்திரங்களும் பன்னிரண்டு திருமுறைகளில் சுருக்கமும் தெளிவும் உடையவை பஞ்சபுராணங்கள் ஆகும். அவை தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம் ஆகும். இவை மனித உறுப்புகளுக்குப் பயன் அளிப்பனவாக அமைந்து இருப்பதை காணலாம்.

தேவாரம் - சிரசு - தலைமைபெறுவது
திருவாசகம் - வாய் - வாழ்த்துவது
திருவிசைப்பா - உள்ளத்தை இசையச் செய்வது
திருப்பல்லாண்டு - நாபிப்கொடி - வாழச்செய்வது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்புராணம் - கால்கள் - நடத்தைக்குரியது.

மனித வாழ்விற்கு பஞ்சபுராணங்களும் உதவுமாற்றை உய்த்து உணர்க. வானசாஸ்திரப்படி பன்னிரண்டு ஆதிக்கர்கள் உள்ளனர் என்று கூறப்படுகின்றது. பன்னிரண்டு மாதங்கட்கும் ஆதித்தர் பெயர்கள் கூறப்பட்டுள்ளன.

சித்திரை மாசம் - வைகர்த்தன மூர்த்தி
வைகாசி - விவஸ்வத மூர்த்தி
ஆனி - மார்த்தாண்ட மூர்த்தி
ஆடி - பாஸ்கர மூர்த்தி
ஆவணி - இரவி மூர்த்தி
புரட்டாதி - லோகப்பிரகாச மூர்த்தி
ஐப்பசி - லோக சாகின மூர்த்தி
மார்கழி - திருவிக்கிர மூர்த்தி
தை - சூரிய மூர்த்தி
மாசி - அம்சு மாலின மூர்த்தி
பங்குனி - திவாகர மூர்த்தி

இவை திருமுறைகளுடன் ஒப்பிடக் கூடியன. பன்னிரண்டு சூரியர்களும் உலகின் புறவிருளை நீக்குவன. பன்னிரண்டு திருமுறைகளும் ஓதுபவரின் அகவிருளை நீக்கவல்லன.

திருமுறைகளைத் தமிழ் வேதங்கள் எனலாம். வேதங்கட்கு மறை என்னும் மாற்றீட்டுச் சொல்லும் வழக்கில் உண்டு. மறை பொருட்களை உடையது. மறை அவை குருவாயிலாக அறியப்பட வேண்டியன. தமிழ் தேவங்கள் மறைவில் இருந்தன. தில்லையிலே கறையான் புற்றினால் மறைக்கப்பட்டிருந்தன. அவை ஞானகுருவாகிய விநாயகரால் வெளிப்படுத்தப்பட்டவை.

வேதம், ஆகமத் தெளிவாக தென்னாட்டுக்கு உதவக்கூடியன திருமுறைகள் எனக் கூறலாம்.

“வேத நெறி தழைத்தோங்க மிகு சைவத்துறை விளங்க”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பத அருள் மொழித் :தேவர் திருவாக்கு ஆகும்.. சைவத் துறையை பொழியச் செய்த திருமுறைகள் சைவத் துறைகள் ஆகிய சரியை, கிரியை, ஞானம், யோகம் என்னும் நாற்பாதங்களையும் தமக்கூடாக பொழியச் செய்துள்ளனர். மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாய்த் தொடங்கவும் வைத்தன. குரு. லிங்க, சங்கம, வழிபாடுகளையும் பயிலவும் வைத்து தலைநிமிர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கின்றன.

நான்கு வடமொழி வேத நெறிகள் தமிழ் வழங்கும் தென்நாட்டிலே தழைத்தோங்கச் செய்த பெருமை திருமுறைகளுக்கு உரியவை அத்துடன் சிவசமயம் விளக்கும் வெண்ணீறு, உருத்திராக்கம், ஐந்தெழுத்து முதலிய சிவசின்னங்களின் பெருமையை அணிந்தும், ஓதியும் நன்மைகளைக் காட்டும் திருமுறைகளின் பெருமை தான் என்னே.

அவைதீக மதமாகிய சமணமும், பௌத்தமும் சைவத்தை மழுங்க முயற்சி செய்த வேளையில் திருமுறைச் சூரியர்கள் தோன்றி அவைதீக தாரகைகளை தாமகள் செய்து சிவநெறி நிற்போருக்கு வாழ்வு அளித்தனர். பக்திக்கு வித்தாகிய திருமுறைகள் பிறவி அறுத்து பேரின்பத்தை நல்லகுவன.

பிரணவப் பொருளாம் பெருந்தகை - ஐங்கரன் ஐங்கரனால் அறிவிக்கப்பட்ட திருமுறைகள் பிரணவத்தின் உள்ளடக்கமாக விளங்குகின்றன. முதலாம் திருமுறை த்+ ஓ "தோ" - என ஆரம்பிக்கிறது. பன்னிரண்டாம் திருமுறை "உலகெலாம்" என மகரத்தில் முடிவுபெறுகிறது. இத்துணைப் பெருமைகள் உடைய திருமுறைகளை வாழ்த்தி வணங்குவோம்.

கட்டுரை ஆக்கம்

அமரர் பண்டிதர், சைவப்புலவர், சிவஸ்ரீ கை. நமசிவாக்குருக்கள் இந்து சமய ஆசிரிய ஆலோசகர் சோதிடர், அனைத்துலக சைவக்குருமார் அர்ச்சகர் பேரவை ஒன்றிய நெறியாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் பயிற்றும் வழி

தமிழ் கற்பிக்கும் வழி பாரம்பரியத் தொடர்ச்சியான வளர்ச்சியும் மொழிப்பண்பாட்டுடன் திறனும் சேர்ந்து சூழலிலே பெரிய தெளிவில்லாத பிரச்சினையாகவும் அன்று பன்மொழிப் பண்பாடு இணையும் பலவித கஸ்டங்களை எமக்குத்தந்துள்ளன. அதனால் நவீன மயமாக்கல் மூலம் வளங்களை நல்ல உத்திகள் மூலம் பயன்படும் வழிகளை இன்று பல ஆசிரியர்கள் அதுவும் தமிழ் பயிற்றும் ஆசிரியர்கள் உள்ளுனர்வுடன் செயற்படுவது கஸ்டமாக இருக்கிறது. இதற்குப்பல காரணங்கள் உண்டு

மொழியின் தன்மை - மொழியின் இயல்பு இதில் கற்றல் கற்பித்தல், சூழல் என்பனவும் கருத்தில் தெளிவு இருத்தல் வேண்டும்

கற்பவர் யார் என்பது யாது என்பது பற்றியும் தெளிவு இருத்தல் அவசியம் ஆகும்.

மொழி கற்பவர் பற்றியும் கற்பிப்பவர் பற்றியும் கற்பித்தல் பற்றியும் தெளி இருத்தல் அவசியமாகும்

மொழி கற்றலுக்கான சமூகப் பண்பாட்டுச் சூழல் அத்தியாவசியமாகும்.

மொழிக் கல்வி கற்பவரின் எச் சூழலில் ஏன் எவ்வாறு அவசியம் என்பதன் தெளிவு

இன்று பாரம்பரிய நிலமைக்கு முற்றிலும் மாறான சூழ்நிலையிலே அது பயிலும் பருவம் பயிற்றுவிக்கப்படுவதும் ஓர் அத்தியாவசிய பிரச்சினை

வேறுபடும் தேசிய பின்புலத்தில் பயிலப்படுவது பயிற்றுவிக்கப்படுவது இன்று பல நாடுகளில் அவ் வல்லரசுகள் தமிழ் பயிற்றும் முறமைகள் பல வித பிரிவாக உள்ளன.

கல்வி மட்டத்தில் ஆசிரியருக்கான பயிற்சியும் அதற்கான வசதி இன்மையும் அர்ப்பணிப்பின்மையும் வேறு பல இதர பிரச்சனைகளும் நமது நாட்டைப் பொறுத்தவரையும் யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையும் அதிகமாகவும் காணப்படுகின்றன.

தமிழ் மொழியை முதலாவது மொழியாகவும் இரண்டாவது மொழியாகவும் மூன்றாவது மொழியாகவும் பயில வேண்டிய போது பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

கீழ்நிலைக் கல்வியில் இடைநிலைக் கல்வியில் மேல்நிலைக்கல்வி இயல் மூன்றாம் நிலைக் கல்வியில் தமிழ் மொழிக்குரிய திட்டமான வழிமுறைகள் நுட்பங்கள் வந்தும் பயன்படுத்தும் விதம் என்று பண்டை முறையில் அமைந்துள்ளது.

இவற்றின் ஒவ்வொரு தன்மையையும் தனித்தனி ஆராய்ந்து பயிற்றும்படி நீண்ட கஸ்டங்களையும் அதே வேளையில் அகன்ற சிரத்தையையும் நாம் அனுபவிக்க நேரிடும். அவை வருமாறு

இதற்கான திறன் ஊக்குவிப்பு பல கோணங்களில் மேற்கொள்ள வேண்டும்.

சரியான திட்டமான வெளிப்பாடு

தட்டுத்தடங்கல் சிரமமின்றி மொழி சொற்பஞ்சமின்றி செறிவுடன் வரவேண்டும்.

ஆர்வமும் ஊக்கமும் உள்ளார்த்தமாக இருக்க வேண்டும்.

*விமர்சனப் பகுப்பாய்வுத் திறன் விருத்தி*

புதிய ஆக்கங்கள் உடனுக்குடன் விமர்சம் பெற்றுத் தெளிய வேண்டும்.

ஆக்கச் செயற்பாட்டின் திறன்கள் தொடர்மதிப்பீடும் கணிப்பீடும் அளவீடு கொண்டதாய் அமையவேண்டும்.

நவீன பயன்பாட்டுக் கருவிகளை மிகவும் சுதந்திரத்துடன் செயற்படுத்தும் ஆற்றல் வேண்டும்.

குறியீட்டு முறைகளை மொழி, இலக்கியம் கற்கும் போது பயன்படுத்தல்.

ஒப்பீட்டு முறைகளை பயனளிக்கும் வண்ணம் பயிற்றுவிக்க வேண்டும்.

*சமூகத்திறன்கள் பேணப்பட வேண்டும்.*

சமநிலையான உணர்வு

கற்பனைப் பயன்பாடு

யதார்த்த நிலை அறிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணோட்டம் ஒப்பரவு ஆகிய உணர்ச்சி ரீதியில் அமைய வேண்டும்.

மனித நேய விழுமியங்கள்
மனிதம் இருத்தல் வேண்டும்

*சரியான தரவுகளை வழங்கப்பட வேண்டும்*

இலக்கியம் பற்றிய அறிவு
மொழி பற்றிய அறிவு
இதில் ஆங்கில இலக்கியம், மேல்நாட்டு இலக்கியம் பாரம்பரியம், ஒப்பீட்டு இலக்கியம், என்பவற்றில் பொதுவான மானிட இயல்புகள் சேர்ந்திருக்க வேண்டும்.

கல்வி விழுமியங்கள் பண்பாட்டுச் சக்தியாகவும் மனிதவள உணர்ச்சிகளுக்கான தொடக்கமாகவும் அமைய வேண்டும். அப்பொழுதான் தமிழ் பயிற்றும் வழியை பெற முடியும்.

விடயங்களை புரிந்து கொண்டு பயிற்றுதல் வேண்டும்
மொழியைப் பெறுவது பற்றியதாகும்
இரசித்த விடயங்கள் ஏதுவாக இருந்தாலும் அதனை இயல்பாக ஊக்கத்துடன் பயிற்ற வேண்டும்.
கேட்டல், பேசல், எழுத்து, வாசிப்பு ஆகிய திறன்கள் அனைத்தும் பெறப் பயிற்ற வேண்டும்.
சிந்தனை வளர்ச்சி மொழியினால் தீர்மானித்துத் தீர்க்கப்பட வேண்டும்.
மொழி சமூக யதார்த்தத்திற்கான வழிகாட்டியாக இருத்தல் வேண்டும்.
மொழியின் தன்மையை பட்டறிவுச் சிந்தனை மூலம் நிஜ உலகிற்கு உடன் நிவாரணம் பெறத்தக்க முறையில் பயிற்ற வேண்டும்.
மொழியானது குழந்தை மனதுக்கு ஒப்பானது என்பதனை உணர்ந்து படிப்பிக்க வேண்டும்.
எதிர்காலத்தை புரிய வைத்து நிகழ்கால இயல்புகளைக் கொண்டு விளக்க வேண்டும்.
பழைய இலக்கியங்களை புரிய வைக்க புதிய சிந்தனைகளை பயன்படுத்த வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கூறிய விடயங்களைப் பார்க்கும் போது மொழியைப் பயிற்றும் வழிமூலம் தாய் மொழிக் கல்வி எத்துணையில் உச்ச நிலையில் வைத்து அக்கல்வியில் ஆளுமை உருவாக்கத்திற்கு எவ்வளவு முக்கியம் என்பதனை மேற்கூறிய உணர்வோடு மாணவச் செல்வங்களை உருவாக்குவது இதன் வழியாகும்.

தாய், தமிழ் மொழியை பயிற்றும் முறையை பல வித சிரத்தைகள் (கவனம்) வேண்டும் என பேராசிரியர் கா. சிவத்தம்பி கூறுகின்றார்.

மொழி கற்பித்தலில் சிரத்தை
தமிழ் கற்பித்தலில் உள்ள சிறப்புப் பிரச்சினைகள்
*இலக்கணம் கற்பித்தல்*
*இலக்கியம் கற்பித்தல்*

*இலக்கணம் கற்பித்தல்*

மொழியின் இயல்பையும் தன்மையையும் உணரவைப்பது இலக்கணம். அழகியல் நோக்கில், ஒரு முகமான பார்வைதான் இலக்கண கற்பித்தல் காணப்படுகிறது. மொழி கற்பித்தலில்பாரிய குறைதான் இன்று வரை காணமுடியும். பாரம்பரிய இலக்கமண் தற்போதும் காணப்படுகின்றது நமது பண்பாட்டுத் தேவை காரணமாக மொழி மட்டத்தில் மரபு நிலை பேணப்படுவது சிறந்த அம்சமாகும். இந் நிலையில் இன்று பல மாற்றங்கள் பெற்றுவிட்டன அந்த மாற்றங்கள் பற்றிய வரலாற்று இலக்கணம் நம்மால் இன்று வரை எழுதப்படவில்லை. மேற்கூறப்பட்ட அவையும் குழந்தைகளுக்கு பயிற்றப்படும் முறையாக இலக்கணம் எழுதப்படவில்லை அதனைப் பின்வருமாறு குறிப்பிடலாம்.

1. விவரண கண்டுணர் முறை பார்க்காது விளக்கம் இல்லாத விதிமுறைப் பணிப்பாகவே இலக்கம் பயிற்றப்படுகின்றது.
2. நவீன காலத்திற்கு முற்பட்ட நடையில் பயிற்றப்பட்டு வருகின்றது.
3. தொழில் நுட்பம், சமூகச் சூழல் முற்றிலும் மாறியுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையில் புதிய மாற்றம் ஏற்படுத்த வேண்டும். உதாரணம் புணரியல் விதிகள், குறுகொலிகள், பிறப்பு போன்றன புதிய மாற்றம் பெற வேண்டும்.

4. ஒருங்கமைப்பில் உள்ள வாக்கிய அமைபில் பயன்படுத்தும் முறைமையும் உண்டு. அந்தப் பயன்பாட்டை மாணவர் விளங்கிக் கொள்ள "பண்பாட்டு இலக்கணம்" அறிமுகம் செய்தல் வேண்டும்.
5. "எண்ணக்கரு" மாற்றம் நிகழ மாட்டா என்ற சிந்தனை யில்லாது எழுத்தியல், சொல்லியல் மாற்றம் பண்டைய முறையிலே கற்பிக்கின்றோம். நுண் நுணர்வை வளர்க்கும் பாணியில் மொழியின் நெளிவு சுழிவுகளைச் சுட்டிக் காட்டும் முறை அமைய வேண்டும்.
6. ஆசிரிய, மாணவர் நிலைக் கேற்றவாறு பயிற்ற வேண்டும்.
7. மதவாதம் இனவாதம் தொடர்பின்மையாக துல்லியவிளக்கம் கொடுத்து "உயிர் மெய்" எயிர் - மெய் - உடம்பு என்ற நிலைமாறி மொழியமைப்பு இசைத் தொலிக்கும் (Harmonzing Sound) விதமாக அறிகும் செய்து உலகப் பொதுமையை எடுத்து விளக்க வேண்டும்.
8. பேச்சுவழக்குக் கேற்ற புதிய இலக்கண மரபுகளை விளக்கும் விதிகள் எழுத வேண்டும்.
9. இன்று பேச்சுவழக்கில் உள்ளமொழியைஅவர்களுக்கு உணர்த்தி (உதாரணம்) மூலம் கற்பிக்க வேண்டும்.
10. வரலாற்று, சமூக மொழியில் பண்பாட்டு அம்சங்களைத் தெளிவிக்க கூடிய பண்பாட்டைக் கற்றல் எக்பதைப் பயிற்ற வேண்டும்.

இலக்கியம் கற்றல் கற்பித்தல் வழி இலக்கியம் கற்பித்தல் இது வரை

1. மரபு பேணுவதாக
2. பதவுரை, பொழிப்புரை, விளக்கவுரை என்ற அடிப்படையில்
3. புரிந்து கொண்ட உள்ளுணர்வு இல்லாமலேயே எந்த இடத்தில் தொடங்க வேண்டுமோ அந்த இடததிலே முடித்து விடுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. அறிவு, திறன், மனப்பாங்கு, உயிரோட்டம், அமைவு என்பவற்றைக் கடந்து அறிவால் வெளிப்படும் திறமையும், திறனால் காணப்படும் ஆற்றலலையும் ஆற்றலினால் வெளிப்படும் படைப்பாற்றலையும் உள்ளீட்டையும் வெளியீட செய்யும் முறையாக இன்று இலக்கியம் கற்றல் இடம்பெறவில்லை.
5. பின்னோக்கில் முன்னேற்றிப் படிப்பிக்க வேண்டும்.
6. செய்யுள் நயப்புரையில் செய்யும் போது உள்ளார்த்தக் கருத்துக்களைத் தெளிவிக்க வேண்டும்.
7. தாக்கரீதியா முறைமையைப் பயன்படுத்த வேண்டும்.
8. கவிதை நயப்பில் திரைப்படப் பாடல்களையும் இலக்கிய நயம் காண வேண்டும்.
9. பழமையுடன் புதிய தொழில் நுட்பம் புதிய உத்தி விஞ்ஞான ரீதியான புனைகதை என்பவற்றுடன் இசைவு பாடவேண்டும்.
10. நடிப்பாற்றல் மிக்க தெளி சிந்தனை இருக்க வேண்டும்.

இலக்கணம் , இலக்கியம், கற்றல் என்பது இன்று

1. நவீன தொடர்புச் சாதனங்கள் ஊடாக பயிற்ற வேண்டும்
2. வானொலி, தொலைகாட்சி, கணினிப்பயிற்சி வேறு புதிய முறைகளில் தமிழ் பயிற்றும் வழியாக அமைய வேண்டும்.
3. திரைப்பட உள்வாங்கல் மூலம் இலக்கிய ரசனையையேற்படுத்த முடியும்.
4. தொலைநகல் வலைப்பின்னி முறைகளை தமிழில் எழுதி விளக்க வேண்டும்.
5. கவர்ச்சியாக பாணியில் நவீன கருவிகள் மூலம் சிந்தனையைத் தூண்டி விட வேண்டும்.

தமிழ் மொழி பயிற்றும் ஆசிரியரின் பங்கு

தமிழ் மொழி பயிற்றும் போது மொழி பற்றிய புறவயப்பட்ட அகவயப்பட்ட தன்மைகளையும் அதன் பிரச்சினைகளையும் ஆசிரியர் முற்றுமுழுதாக அறியப்பட்ட, தெளியப்பட்ட சிந்தனைக் கூர்ப்புடைய, செயற்திட்ட செயலாளராக அமைய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயனுறுதித் தன்மையும், வினைத்திறனும் கொண்ட ஆசிரியரை உருவாக்க வேண்டிய கல்வித் தொழில் நுட்பத்தை பயன்படுத்த வேண்டும். அதற்கான நடைமுறைகளை இந்தியா, சிங்கப்பூர் ஏனைய வளர்ச்சியடைந்த உலக நாடுகளில் பலவித நவீன தொழில் நுட்ப வழிமுறைகள் பயன்படுத்தப்படுகின்றன. இதற்கான பயிற்சிமுறைகளை இன்று தமிழ் பயிற்றும் ஆசிரியர்களுக்கு பயிற்ற வேண்டும்.

1. அதற்கான அறிவுப் பசியை ஏற்படுத்தவும் அதற்கான அறிவுத் திறனைக் கொடுக்கக் கூடிய ஆசிரியர்கள் மனப்பூர்வமாக, ஆத்மா நிலையில் நின்றுழைக்க வேண்டும்.
2. தமிழ் கற்பிக்கும் கொள்கை எடுகோள்களை நிர்ணயஞ் செய்ய வேண்டும்.
3. தமிழ் பண்பாடு பிரதான சூழலாக உள்ள நிலமைகளில் தமிழ் மொழியைப் பயிற்றல்
4. பலவிதமான பல்துறைப் பண்பாட்டுச் சூழ்நிலையில் தமிழ் மொழியைப் பயிற்றல் வேண்டும்.
5. தமிழ் மொழிக்குரிய இடம் வழங்கப்பட்டுள்ள அரசியற் சமூகச் சூழல்கள்.
6. தமிழுக்குரிய இடம் வழங்கப்படாத அரசியல் சமூகச் சூழலில் எவ்வாறு ஆசிரியர் தொழிற்பட வேண்டும்.
7. ஒவ்வொரு சூழ்நிலைகளிலும் உள்ள சாத்தியத் தன்மைகள்

என்ற வேறுபாடு பல காரணங்களையும் அடிப்படையாகக் கொண்டு ஆசிரியர்கள் புலமை பெறவேண்டும். இதற்கான பயிற்சிநிலையங்கள், விரிவுரை நிலையங்கள், அதிகபட்ஷமாக நெறிப்படுத்தப்பட வேண்டும். அந்த நிலையில் ஆசிரியர்கள் பின்வரும் நிலையில் தெளிவாக வேண்டும்.

1. இலக்கியக் கல்வி மாணவர்களிடையே அழகியல் உணர்வினை வளர்க்க வழி செய்ய வேண்டும்.
2. இலக்கியம் நல்லது, அல்லது என்ற சுவையைப் மதிப்பீட்டுரீதிரியல் பயன்பாடாக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. மனிதம், மனிதப் பண்புகள் மதிப்பெறுமானங்களைக் கொண்டது என்ற நம்பிக்கையில் முழுமையாக்கப்பட வேண்டும்.
4. இலக்கியம் நமது மூதாதையர்கள் தமக்கு உணர்த்திய மூவகையறிவுகளையும் தெளிய வேண்டும்.
5. மாணவர்களைத் தம் பாரம்பரிய பண்பாட்டுக்குரிய அடித்தளமாக்க வேண்டும்.
6. விமர்சன ரீதியான கண்டிப்பும் கவர்ச்சியும் அமைந்திருக்க வேண்டும்.
7. பரீட்சை முறைமையும் அடிப்படையாளன் கொள்ளவேண்டும்.
8. ஒரு படைப்பைப் பொறுத்தவரையில் அதனை ஆக்கியோன் முக்கியமானவன் படைப்பில் இடம்பெறும் சொல்லும் உத்திமுறைகள் அவற்றைக் கண்டறியும் தன்மைகல் ஆசிரியர்களுக்கு முழுமையாகத் தெரிந்திருக்க வேண்டும்.
9. சமூக உறவுப் பரிமாற்றம், சமூக ஊட்டம் உலகமாற்றம் தெரிந்திருக்க வேண்டும்.
10. ஆளுமை வெளிப்பாடு, கல்வித் தொழில்நுட்பம் வினைத்திறன் பயனுறுதித் தன்மை என்ப னவெளிப்பட வேண்டும்.
11. திரைப்படங்கள், திரைப்படத்துண்டுகள், வானொலி, தொலைக்காட்சி நிரல்நிலைப்பட்ட பயிற்றல் படங்காட்டி **(Projector)** ஒலிப்பதிகைக் பொறி, கணனிப் பயிற்சி என்பன பயன்படுத்தல் வேண்டும். இவை யாவற்றையும் ஆசிரியர்கள் பயிற்றுவிக்க வேண்டும்.
12. இலங்கையில் தொழில் நுட்ப வளர்ச்சி இன்மை காரணமாக மேற்போன்ற நிலையில் இரண்டு அல்லது மூன்று நவீன முறைகள் தான் பயன்படும்.

ஆசிரியர்கள் அறிதிறனும், மிக்க புலமையும், ஆளுமைத் தன்மையும் மொழி பயிற்றும் வழியாக அமையும். அத்துடன் பயன் உறுதித் தன்மை, வினைத்திறன், விரிவாக்கம் பெறும் போது அதிகூடிய மொழித்திறனுடைய மாணவர்களை வெளியீடு செய்ய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியும். தற்காலத்தில் ஆக்கத்திறன்களை வெளியீடு செய்வதில் மாணவர்களில் ஆர்வம் மிகக் குறைவாக இருக்கின்றது. இதற்கு மாணவரையும் அவர்களின் புலமை பற்றிய அறிதெளிவும் பாங்கும் கண்டறியும் தன்மையும் விழிப்புடன் அவதானித்து செயற்பட வேண்டும். அறிவு, திறன், மனப்பாங்கு, ஆற்றல், வெளிப்பாடு என்பன புதிய புதிய சிந்தனை மிளிர்வுடன் வெளிப்படும் போது தான் திறமையான மொழியாளுமையுடன் கூடிய மாணவரை பெறமுடியும். இதற்காசிரியர்கள் பூரணமான, சுதந்திரமான அன்புடன் செயற்படவேண்டும். அப்போது தான் பூரணபயன்பாட்டை பெற முடியும். பாரம்பரிய முறைப்படி மனனமும் தேவை அத்துடன் புதிய பார்வையுடன் கூடிய சிந்தனை மாற்றமும் மாணவனில் உள்ளத்தில் இருந்து ஊற்றெடுக்க வேண்டும்.

ஆகவே ஆசிரியர்கள் எப்படி இருக்க வேண்டும் என்பதை காட்டிலும் மொழி பயிற்றும் போது அவற்றுக்கான வழிமுறைகள் எப்படி அவரிடம் பெற வேண்டும் என்பதற்கு பாரிய வழிகள் உண்டு. அதில் ஒரு சில வழியைக்காண இவ் "வழி" சஞ்சிகை மூலம் திறவுகோலாக அமைந்தன என சிரம் தாழ்த்திக் கேட்கின்றேன்.

பயன்பட்ட நூல்கள்

1. தமிழ்பாடம் சொல்லும்முறை - 1 1978
2. தமிழ்பாடம் சொல்லும்முறை - 2 1981
   பா. பொன்னப்பன்
   வெளியீடு - தமிழ்நாட்டு பாடநூல் நிறுவனம் - 1981
3. வெளிநூல்களையும் தமிழ் மொழியமைப்பையும்
   கா.சு. பிள்ளை
   கழக வெளியீடு - 2001
4. கல்வியும் மனித வளவிருத்தியும்
   சோ. சந்திரசேகரன்
   மா. சிவத்தம்பி
   எஸ். எச். பதிப்பகம்
   கொழும்பு - 2002



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. தமிழ் பயிற்றும் முறை
நா. சுப்புரெட்டியார்
மெய்யப்பன்
தமிழாய்வகம் - 2002
6. தமிழ் கற்பித்தலில் உன்னதம்
கா. சிவத்தம்பி
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் 2001
7. தமிழ் பாரம்பரியக் கற்பித்தல்
சபா. ஜெயராசா
பொஸ்கோ பதிப்பகம் - 200
8. தியானமும் கல்வியும்
சபா. ஜெயராசா
9. கல்விச் சீர்மியம்
சபா. ஜெயராசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவப்பேறும் சிவபதமும் அடைந்த சித்தாந்த பண்டிதர், சைவப் புலவர் பண்டிதர் ஸ்ரீலஸ்ரீ கைலாயக்குருக்கள் நமசிவாயக்குருக்கள் அவர் திவ்விய வாழ்க்கைச் சரிதம்.

பிரணவப் பொருளாய், நாதமாய், வித்தாய் தமது ஒரு சொல்லால் இந்த உலகத்தை ஆக்கியளித்தருளிய விநாயகப் பெருமான் திருவருளினால் சிவமும், தவமும் இயங்கும் சிவபூமியாம் ஈழமணித் திருநாட்டிலே வரணியாதீனம் வேதாரண்ய பரம்பரையுமுடைய ஆதி சைவகுலத்திலே சைவநெறி மிளிர சிவமதமும் வடமொழியும் தென்தமிழும் ஒருங்கே சிறந்து விளங்கும் பகுதியே யாழ்ப்பாணம் ஆகும்.

கலைவளமும் பெருவளமும் சிறந்து இயங்கும் வடமராட்சிப் தெற்கு, மேற்குப் பகுதியில் உள்ள கருணையம்பதியில் குருக்கள் குடியிருப்பில் பெருமை மிக்க கைலாயக் குருக்களுக்கும் அமிர்தவல்லியம்மைக்கும் மணம் நிகழ்ந்தது. அவர்கள் இருவரும் கட்டிய காலத்தில் பூர்வபுண்ணிய பலத்தால் வணக்கத்திற்குரிய ஸ்ரீலஸ்ரீ திருஞானசம்பந்தக்குருக்கள் ஸ்ரீமதி சிவபாக்கியம் (அமரர்) செவ்வந்தி நாதக்குருக்கள் (அமரர்) ஆகியோருடன் சிறந்த கல்விமானும் வித்துவம் நிறைந்தவருமான ஸ்ரீலஸ்ரீ நமசிவாயக் குருக்கள் மங்களம் நிறை தரு சித்திரபானு வருடம் மாசித் திங்கள் 22ம் நாள் (02.03.1944)ஆண்டு அவர்கள் அம்மையாரின் வயிற்றில் அவதாரம் செய்தார். இதன் பின்னரும் சிவத்திரு சுப்பிரமணியம் எனும் சகோதரரும் பிறந்தார்.

இவர்களைக் கண்ணேபோலும் பொன்னேபோலவும் சகல செல்வம் மிக்க யோகத்துடன் அரும் பணியாற்றி அவர்களுக்கு வேண்டிய கடமைகளை உரிய காலத்திலே செய்து வளர்த்தார்கள் பெற்றோர்கள். நல்ல குரு மரபிற்கிணங்க வித்தியாரம்பம் செய்து ஆரம்பக் கல்வியைக் கொடுத்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விக்கனியாக விளங்கும் நமசிவாயம் ஆரம்பக் கல்வியை கரணவாய் தாமோதர வித்தியாலயத்திலே எல்லோரும் வியப்புறும் வண்ணம் கல்வி வளம் பெற்று தமது உயர்கல்வியை யா/விக்னேஸ்வராக்கல்லூரியிலும் கல்விபயின்றார். கல்வியைப் பெற்று வரும் காலத்திலே மிகவும் அடக்கமும் பணிவும் பண்பையும் பெற்றுக் கொண்ட நமசிவாயம் அவர்களை ஆசிரியர்கள் அதிபர்கள் வாழ்த்திப் பாராட்டி கௌரவித்தார்கள். கல்விச் செல்வத்தை சிறந்த வளத்துடன் பெற்றுக் கொண்டார்.

சிறந்த ஆசான்கள் இடத்திலே ஐயம் திரிபறக்கல்வியை பெற்றுக் கொண்ட நமசிவாயம் அவர்கள் தமது தந்தையாரிடமும் தமது குல சிரேஸ்டர்களிடமும் குல ஆஷாரக் கல்வியையும் சமஸ்கிருதம், கிரியை போன்ற தொலைக்கல்வியையும் பெற்றுக் கொண்டார். பின்னர் துறை சார்ந்த பெரியோர்களிடத்தே சோதிடம், சோதிட கணிதம் வானியல் போன்ற கல்வியினையும் பெற்றுக் கொண்டார். தந்தையார் வழிமரபுகளை துறைபோகக் கற்றுக் கொண்ட அவர் தந்தையார் காலத்திலேயே அவருக்கு மேலான நல்லறிவினைப் பெற்று தலைநிமிர்ந்து நின்றார். பெற்றோர் மற்றோர் போற்றிட தம் மனங் குளிரக் கற்பக விருச்சம் போல் எல்லா நலன்களையும பெற்றுக் கொண்டார்.

சைவ சமயக் கிரியைகளை தமது குலதெய்வமாகிய மூத்தவிநாயகர் கோவிலில் தாமே பிராதமகுருவாக இருந்து நித்திய நைமித்திய கிரியைகளை செய்து வந்தார். ஊரவர்கள் அன்பு மிக்க பக்தி நெறியானார். எல்லோரும் அவரின் ஆமகம் தப்பாத கிரியைகளைக் கண்டு அருள் பெற்றார்கள். கிரந்தம், நாகரம் என்ற இருவகை அறிவையும் அத்துடன் தமிழில் இலக்கண இலக்கியத்திலும் சிறந்து ஆர்வமுற்று ஆரிய திராவிட பாஷாவிருத்திச் சங்கத்தின் ஊடாக நடந்த பண்டிதர் வகுப்பிலும் கலந்து திறமையான சித்தியைப் பெற்று தமிழ்ப் பண்டிதர் ஆனார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு நல்லறிவினாலும் தலைப்பட்ட நமசிவாயக் குருக்களுக்கு பலவித கஷ்ரங்கள் ஏற்பட்டது. 1962ம் ஆண்டு வைகாசி மாதம் பூர்வபக்தத் திதியில் 61 வயது கிட்டி தந்தையார் இறைபதம் அடைந்தார். தந்தையாரின் இழப்பு ஈடு செய்ய முடியாத போதும் தமது திறமை அறிந்து ஒழுகிய காலத்திலே 1967ம் ஆண்டு தாயாரும் பின்னர் கடவுள் நிலையடைந்தார்.

இதன் பின் 1969ம் ஆண்டு தை மாதம் உற்றார் உறவினர் ஆழ தியாகராசக் குருக்கள் அவர்களின் 2வது புத்திரி புவனேஸ்வரியம்மையாரை கடிமணம் செய்து வைத்தனர். இல்லறத்தின் இனிமையின் பயனாக முறையே வைத்தீஸ்வரன்,மாதினி,வாமா,வாகீஸ்வரன், என்ற பஞ்சரத்தின மக்களைப் பெற்றனர் திரு.திருமதி நமசிவாயக்குருக்கள் அவர்கள்.

உத்தியோகம் புருஷலட்சனம் என்பதற்கிணங்க 1977.05.26 அன்று யா/ மல்லாவி மகாவித்தியாலயத்தில் வித்தியா குருவாக நியமனம் கிடைத்த ஆசிரியர் சேவையில் கால்வைத்தார். அதன் கால்கள் அகல விரித்து 1982.12.31 வரை பயிற்சியடைந்து சித்தி பெற்றார். பின்னர் 01.01.1983- 13.06.1991 வரையும் யா.'. விக்னேஸ்வராக்கல்லூரியிலே ஆசிரியர் சேவையைத் தொடர்ந்தார். இக்காலத்தில் தமிழ், இலக்கணம், இலக்கியம் போன்ற திறனும் வடமொழியையும் அவரை மேலும் உயர்த்தியது.

1991.06.04-31-12.1993 வரையும் ஆசிரிய ஆலோசகராக வடமராட்சிக் கோட்டத்தில் பதவி உயர்வு பெற்றார். பின்னர் 1.1.1994- 1.3.95 வரை ஆசிரிய ஆவோசகராக பருத்தித்துறைக் கோட்டத்தில் கடமையாற்றிய போது யா/குடத்தனை அ.மி.த.க பாடசாலையில் வந்து சிறந்த முறையில் கற்றல் கற்பித்தல் முறையைச் செய்து காட்டி ஆசிரியர்களின் ஆலோசனைகளை வழங்கினர்.

02.03.95 தொடக்கம் 30.07.1998 வரையுள்ள காலப்பகுதி பல வித பரிநாமம் பல்வேறுபட்ட பொறுப்புக்களுடன் புற்றளை மகாவித்தியாலத்திற்கு மீண்டும் ஆசிரியராக வருகை தந்து உயர் தரகலைப்பிரிவு மாணவர்களுக்கு கல்வி கற்பித்தார். அக்காலத்திலே பல பண்புள்ள மாணவர்களை பல்கலைக் கழகம், உயர்கல்வி அகங்களிலே செல்லக்கூடிய தகுதியானவர்களை உருவாக்கினர். அக்காலத்திலே சிறந்த கல்விச் சேவையை வழங்கினர்.

1994ம் ஆண்டு 1995ம் ஆண்டு காலப்பகுதியில் பெரும் அளவிலே திருவள்ளுவர் கோட்டம் இயங்கி வந்தகாலத்திலே திருக்குறள் சம்பந்தமான சிந்தனைகளை நெல்லண்டடை பத்திரகாளி தேவஸ்தானத்தில் திரு.சொக்கன், திரு.த.கலாமணி, திரு.அ.சண்முகதாஸ், திரு.சி.சிவலிங்கராசா கோன்ற விரிவுரையாளர் பேராசிரியர்களுடன் கலந்து சிறந்த உரைகளையாற்றினார். நமசிவாயக்குருக்கள்ஐயா அவர்கள்.

அத்துடன் மட்டுமன்றி யா/ வேலாயுதம் மகா வித்தியாலயம் யாழ் நெல்லியடி மகாவித்தியாலக் கல்லூரி, யாழ் வடஇந்து மகளீர் கல்லூரி ஆகிய இடங்களில் பல்வேறு முகமாக பண்டிதர் வகுப்புப் பயிலும் மாணவர்களுக்கு அறிவுப் பசி நீக்கினார்.

அக்கால கட்டத்திலே பல பெரியோர்கள் பல அரிய மாணவர்கள் ஆசிரியர்கள் போன்றோர் தொடர்புகளைப் பெற்றார்கள். அத்துடன் அன்பு மனைவி, மக்கள் எல்லோரின் உரிய கடமைகளையும் செய்யத் தவறவில்லை. தொடர்ந்து 1.1.96 தொடக்கம் 1.3.2004 வரையும் யாழ் வேதாரணியேஸ்வர வித்தியாலயத்தில் தமது ஆசிரியப் பணியைச் செய்து ஓய்வு பெற்றார்.

இக்காலத்தில் கோயில்கள் தோறும் சென்று பலன் எதிர்பாராமல் பயன் பெறும் பல கடமைகளை கல்விக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயத்திற்கும் தமிழுக்கும் பல வேறுபட்ட கோணங்களில் சேவை செய்தார். 1996ம் ஆண்டு தொடக்கம் சிறந்து விளங்கிய சந்நிதியார் ஆச்சிரம கலைபண்பாட்டுக் கழக பேரவை மூலம் சிறந்த காப்பாளராக இருந்து அளப்பெரும் சேவையாற்றினார்.

உடுப்பிட்டி பத்திகாளி உச்சில் அம்மன் கோவில் வேறு முருகன் ஆலயம் இன்னும் பல ஆலயங்களில் அர்ச்சகராய் சிறந்த குருவாய் செறிவுடைய ஆலோசகராய் சிறந்த குருவாய் இருந்து பல விதமுகங்களில் தொண்டாற்றினார். இக் காலத்தில் பல சமயத்தொண்டு, கதாப்பிரசங்கம், சொற்பொழிவுகள் என்பன செய்து கொண்டார்.

இத்துடன் தனது மூத்த மகன் வைத்தீஸ்வரனை பிரான்சுக்கு அனுப்பி வைத்தார். அங்கு சிறந்த வளங்களைப் பெற்ற மகனுக்கு இருபாலையில் தற்சமயம் வசிக்கும் வேதாரண்ய குருக்கள் பரம்பரையைச் சார்ந்த ஓய்வு பெற்ற அதிபர், சமாதான நீதிபதி, அனைத்துலக சைவகுருமார் பேரவையில் கௌரவ செயலாளருமான சிவஸ்ரீ கந்த சோமசுந்தரக்குருக்கள் அவரின் கனிஸ்ட புத்திரி சுந்தரேஸ்வரியை கடிமணம் செய்து கொடுத்தார். இது இந்தியாவிலே 2003.08.29ம் திகதி நடந்தது.

பூர்வ புண்ணிய பயனால் தமது மூத்த மைந்தன் வைத்தீஸ்வரன் மருமகள் சுந்தரேஸ்வரியின் திருமணத்தின்போது இந்தியாவிலே தமக்கென உரித்துடைய வேதாரணிய திருமறைக்காட்டு எம்பிரானையும் வரணி மடத்தார் நிர்வகிக்கும் சிதம்பரம் அழகிய சிற்றம்பலம் உடையானையும் மற்றும் தேவாரம் பாடிய பெருமைமிக்க பெரியதிருத்தலங்களையும் பார்த்துத் திருவருளையும் பெற்றுக் கொண்டார்.

இதன் பின்னர் தமது இரண்டாவது மகள் வாமா பல்கலைக் கழகத்திலே வர்த்தக பிரிவில் கல்வி கற்கும் காலத்திலேயே பாலசுப்பிரமணியம் (பொறியியல் லண்டன்) என்பவருக்கு திருமணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து கொடுத்தார். பின்னர் மாலிசந்தி ஆச்சிரமத்தில் தமது மூத்த மகள் மாதினியை ஆசிரியைப் பணியில் அமர்த்தி தானும் பலவித ஆலோசனைகளை வழங்கி வந்துள்ளார். அக்காலத்திலே பல விதகௌரவிப்புக்களையும் பெருமைகளையும் பெற்றுக்கொண்டார். மேலும் உச்சில் அம்மன் கோவிலிலும் பதக்கங்களும் விருதுகளும் பெற்றுக் கொண்டார். பெருமையின்று அருமையாக வாழும் காலத்திலே அகில உலக சைவக்குருமார் இணைந்து கொண்டு அண்மையில் 2004 சிவாவச்சாரிய பீடாதிபதி என்ற தகுதியையும் தன்மையையும் வழங்கிவிட குருக்கள் அவர்கள் சைவக்குருமார் சிவாச்சாரியர்களுக்கு சிறந்த வணக்கம் மிக்க குருவாக இருந்து அவர்களுக்கு கிரியை, சமஸ்கிருதம், சோதிடம், இலக்கணம் என்பன பயிற்றுவித்தார். அவ்வாறு வரும் காலத்திலே 4.07.2004 அன்று பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திர குமார் வேண்டுகோளுக்கு இணங்க சமஸ்கிருத இலக்கண சைச சித்தாந்தக் கல்வி நிறுவி அதில் தானே அதிபராகவும் விரிவுரையாளருமாகவும் நின்று ஆற்றிய சேவையை நாம் மறக்க முடியாது.

நல்லவர், வல்லவர், பண்புடையவர், பாராட்டத்தக்கவர், குடும்பத்தில் யார் மீதும் அன்புடையவர் இரக்கமுடையவர் சிறந்த முயற்சி உடையவர் உதவும் கரம் உடையவர் எதற்கும் அஞ்சா நெஞ்சுடையவர் மென்மையானவர் தனது இலட்சியத்தை திறனுடன் நிலை நிறுத்துபவர் நல்ல மனித நேயம் உடையவர். சீலமுடையவர் பாசம் மிக்கவர் ஒருவருடனும் கோவிக்காதவர் எதையும் அன்பிலே சாதிப்பவர். அறிஞர்களுக்கும் அறிவானவர். துணிவுடையவர்.

சிவாச்சாரியர்களுக்கு 04.07.2004 வகுப்பெடுக்கும் முறை நுட்பமானது பாராட்டத் தக்கது. பயன் உடையது. எல்லாம் இழந்து பரிதவிக்கவிட்டுச் சென்று விட்டார். பொல்லாக் காலம் குடி கொண்டது. சொல்லாம் அகன்று விட்டார். தன்னை மறந்தார். தலைவரை நினைத்தார். பாசம் மறந்தார். நேசம் விட்டார். புவனேஸ்வரியம்மாவையும் பிள்ளைகளையும் அன்றே நீத்தார். இறைகழல் சென்றார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமசிவாயக்குரு நம்மிடத்தே இல்லை. இதை ஓதினால் நாம் அவ்விடத்தை அடைவோம். ஓதுவேதம் நாளும் ஆராய்ச்சி தேடிய சிவம், ஓழுக்கம், நன்றி மறவாத் தன்மை உபசரிப்பு எல்லாம் மறைந்தது. நாம் நினைக்காத வண்ணம் உள்ளோம். ஐயா குருவே சரணம்.

நாளும் திதி தாரணவருடம் ஆடித் திங்கள் 2ம் நாள் அமாவாசைத் திதியில் காலை 7.00 மணியளவில் கையிலை பதம் குஞ்சரத் தாங்கிடம் நாடினாரே என்று நாம் நலம் பெறுவோம்.

"சுபமஸ்து"





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்லல்

அன்புடனும், பாசத்துடனும், பண்புடனும்
எம்மை எல்லாம் வழிநடாத்தி எமது குடும்பத்தின்
ஒளி விளக்காய்த் திகழ்ந்த அமரர் நமச்சிவாயம்
அவர்கள்
திடீர் நோய்வாய்ப்பட்டு இருந்த வேளையில்
உதவிய உறவினர்கள், நண்பர்களுக்கும்,
சிகிச்சை அளித்த மந்திகை அரசினர்
வைத்தியசாலை வைத்தியர் கதிரவேற்பிள்ளை
அவர்களுக்கும், அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு
ஓடோடி வந்து உதவியோர் எமது துயரில்
நேரிலும், ஏனைய வழிகளிலும் பங்கு கொண்டோர்,
அஞ்சலி செலுத்தியோர், பிரசுரம் வெளியிட்டோர்,
மலர் வளையம் செலுத்தி அஞ்சலி செலுத்தியோர்,
இன்று நடைபெறும் அன்னாரின்
ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும்
பங்கு பற்றியவர்களுக்கும்,
அந்தணச் சிவாச்சாரியார்களுக்கும் இம்மலரை
மலரை ஆக்கியோருக்கும்
எமது குடும்பம் சார்பில் நன்றி பலகோடி.

இங்ஙனம்,
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரு வம்ச வழி

கை.திருஞானசம்பந்தக்குருக்கள் த

கைலாசநாதக்குருக்கள்
+
அமுதவல்லி

செவ்வந்திநாதக்குருக்கள்
+
யோகாம்பிகை

சிவபாக்கியம்
+
வீ.வேதமணவாளன்

திருஞானசம்பந்தக்குருக்கள்
+
வள்ளியம்மை
↓
சிவகாமிப்பிள்ளை
சௌதாமலர்
புனிதவதி
மங்கையற்கரசி

செவ்வந்திநாதர்
+
வள்ளியம்மை
↓
கைலாசநாதர்
கலைநிலா
செவ்வேள்

+
விசாலாட்சியம்மா
↓
செந்தூரர் (அமரர்)
மாலினி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரு வம்ச வழி

ருஞானசம்பந்தக்குருக்கள் தம்பதிகள்

செவ்வந்திநாதக்குருக்கள்
+
யோகாம்பிகை

கௌரிஅம்மா
+
சட்டநாதக்குருக்கள்

செவ்வந்திநாதர்
+
ம்மை
விசாலாட்சியம்மா

சநாதர்
நிலா
வேள்

செந்தூரர் (அமரர்)
மாலினி

நமசிவாயக்குருக்கள்
+
புவனேஸ்வரி

வைத்தீஸ்வரன் + சுந்தரீஸ்வரி
மாதினி
வாமா + மா.பாலசுப்பிரமணியம்
வாகீஸ்வரன்
சூர்யா

சுப்பிரமணியம்
+
சிவக்கொழுந்து

வாசுகி
றங்கா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



- எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
- எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
- எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்.
- உன்னுடையதை எதை இழந்தாய் எதற்காக நீ அழுகிறாய் ?
- எதை நீ கொண்டு வந்தாய்? அதை நீ இழப்பதற்கு.
- எதை நீ படைத்திருக்கிறாய், அது வீணாவதற்கு.
- எதை நீ எடுத்துக் கொண்டாயோ. அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
- எதை கொடுத்தாயோ, அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
- எது இன்று உன்னுடையதோ, அது நாளை மற்றொருவருடையதாகிறது.
- மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்.
- இந்த மாற்றம் உலக நியதியாகும்.

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்.

"இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமாகும்"

Published By
Jeya Offset Printers,
B1,S1,Bloemendhal [illegible] 0112 478442/3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org